Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 திருவள்ளுவர் ஆண்டு- 2035 கார்த்திகை-01 16-11-2004 செவ்வாய்க்கிழமை ஓசை-272

S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில்
அசல் 22 கரட்
தங்க நகைகளை
உங்கள்
விருப்பத்திற்கேற்ப
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
(சி-10704) T.P: 024-222 4247



# எந்தவித தகைமையும் இல்லாமல் பணம் சம்பாதிக்கும் வழி அரசியல்

## சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க

(கொழும்பு)

**எந்தவித தகைமையும் இல்லாமல் பணம் சம்பாதிக்கும் ஒருவழி அரசியல்தான் எனவும் அது வியாபாரமாக மாறிவிட்டது என்றும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.**

இலங்கை தொழில் வல்லுநர்களின் சங்கத்தின் இருபத்து நான்காவது தலைவரைத் தெரிவு செய்யும் முகமாக கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்ந்த மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் பல இளைஞர்கள் அரசியலில் ஈடுபட்டுப் பெரும் போட்டியில் இறங்கியுள்ளனர். இவர்களின் சிலர் கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரண தரத்தில் கூட சித்தியடையாதவர்கள்.

இவர்களிடம் ஏன் அரசியலில் ஈடுபட முயற்சிக்கின்றீர்கள்? கல்வி பயின்ற பின்னர் இந்த முயற்சியில் இறங்கலாமே? என கூறிய போது, அரசியலில் ஈடுபட வேண்டிய தேவை இருப்பதாக அவர்கள் கூறியதுடன், இந்தத் துறைதான் எந்தவித தகைமையும் இல்லாமல் பணம் சம்பாதிக்கக் கூடிய ஒரு வழியாகும் என அவர்கள் கூறினார்கள் என்றார்.

நாட்டின் சட்டம் ஒழுங்கு ஆகியவற்றின் கௌரவம் மிகு தன்மையைப் பாதுகாப்பதற்கு பொலிஸ் மற்றும் நீதித்துறை ஆகியவற்றின் நேர்மையானதும்

(12ஆம் பக்கம் பார்க்க)

-கூட்டுறவுச் சமூகத்தினரால்-

## "உயிர்காக்கும் இரத்ததானம்" அமைப்பு முல்லையில் தேசியத் தலைவரின் பிறந்த தினத்தையொட்டி ஆரம்பம்

தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களின் 50 ஆவது பிறந்த தினத்தையொட்டி முல்லை மாவட்ட கூட்டுறவு சமூகத்தினரால் "உயிர் காக்கும் இரத்ததானம்" என்னும் நிகழ்வின் அங்குரார்ப்பண வைபவம் நேற்று திங்கட்கிழமை பகல் 1.00 மணிக்கு முல்லை நகரில் கரைதுறைப்பற்று ப.நோ.கூட்டுறவு சங்கத் தலைமை பணிமனையின் மகாநாட்டு மண்டபத்தில் கரைதுறைப்பற்று ப.நோ.கூ.சங்க பொது முகாமையாளர் மனோகரன் அவர்கள் தலைமையில் ஆரம்பமாகியது. இவ்வைபவத்திற்கு முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன், முல்லைமாவட்ட நிர்வாகசேவை (12ஆம் பக்கம் பார்க்க)

## அரசுக்கு எதிர்க்கட்சி பிரச்சினையல்ல மக்கள் விடுதலை முன்னணியே பிரச்சினை

-எதிர்க்கட்சித் தலைவர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

ஒஸ்லோவில் அரசாங்கத்திற்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட உடன்படிக்கைக்கு அமையவும் டோக்கியோ பிரகடனத்திற்கு ஏற்பவும் எடுக்கப்படும் தீர்விற்கு தாம் முழுமையான ஆதரவை வழங்குவதாக எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சிக்குப் புதிய உறுப்பினர்களை இணைத்துக்கொள்ளும் பணி நேற்று ஆரம்பிக்கப்பட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்;எதிர்க்கட்சிக்கும், சனாதிபதிக்கும் இடையில் பிரச்சினைகள் இல்லை. மக்கள் விடுதலை முன்னணியால்தான் பிரச்சினை இருந்துவருகின்றது.

மக்கள் விடுதலை முன்னணியினர் அரசாங்கத்தின் கூட்டணியாக இருந்துகொண்டு சமாதான முயற்சிகளை முன்னெடுக்க வேண்டாமெனக் கூறுகின்றார்கள்.

இது எனக்குத் தெரிந்த வகையில் சமாதானத்தை முன்னெடுக்கப் பெருந்தடையாகவுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணி எதிரிகளை விலக்கிக்கொண்டு மக்களிடம் மன்னிப்புக்கேட்டு சமாதான நடவடிக்கைகளை முன்னெடுக்க சனாதிபதிக்குச் சந்தர்ப்பம் வழங்குவது சிறந்தது எனவும் அவர் மேலும் கூறினார்.

## வன்னிப் பிரதேசத்தில் மீட்புநிதிக் கடன் மீளளிப்பு

(அலுவலக செய்தியாளர்)

தெரிவுசெய்யப்பெற்றோருக்கான தமிழீழ மீட்பு நிதிக்கடன் மீளளிப்பு நேற்று புளியங்குளம்,மல்லாவி, அக்கராயன்,கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களில் நடைபெற்றது.



நேற்று காலை 8.30 மணிக்கு புளியங்குளம் வருவாய்ச் செயலகத்திலும்,மு.ப.11.30 மணிக்கு மல்லாவி வருவாய்ப் பகுதி செயலகத்திலும், பி. ப. 1.30 மணிக்கு (12ஆம் பக்கம் பார்க்க)

–மாணவர்களை ஏற்றிச்செல்வதில்லை–

## அரச பேருந்துகளை மறித்து நாவற்குழியில் போராட்டம்

நாவற்குழியில் நேற்று 8.30 மணியளவில் பாடசாலை செல்லும் மாணவர்களை ஏற்றாமல் செல்லும் அரச பேருந்துகளைத் திடீரென மறித்து மாணவர்கள், பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். கடந்த சில மாதங்களாகப் பருவகாலச்சீட்டு உள்ள மாணவர்களைச் சில அரசாங்க பேருந்துகள் ஏற்றிச்செல்லாது விட்டுவிடுவதால் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டன. அதனால் ஆத்திரமுற்ற பொதுமக்களும் மாணவர்களும் இப்பாதையூடாக வந்த அரசாங்கப் பேருந்துகளை மட்டும் மறித்து மறியற் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இரண்டு மணித்தியாலயங்களுக்கு மேலாக நீடித்த இப் போராட்டத்தினால் சம்பவ இடத்திற்கு வருகைதந்த போக்குவரத்துச்சபை அதிகாரிகளும், பாராளுமன்ற உறுப்பினரும், மக்களுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு மாணவர்களின் நலன்கருதி இனி வரும் காலங்களில் மாணவர்

(12ஆம் பக்கம் பார்க்க)

—யாழ்.இலும் கிளிநொச்சியிலும்—

## வெள்ளம் நிரம்பிய குழிகளில் வீழ்ந்து இரு பெண் குழந்தைகள் பரிதாப மரணம்

யாழ்ப்பாணத்திலும் கிளிநொச்சியிலும் வெள்ளம் நிரம்பிய குழிகளில் வீழ்ந்து இரு பெண் குழந்தைகள் மரணமான பரிதாப சம்பவங்கள் இரண்டு நேற்று இடம் பெற்றுள்ளன.

கிளிநொச்சியில் நீரில் மூழ்கி இரண்டரை வயதுப் பெண் குழந்தை ஒன்று பரிதாபகரமாக மரணமடைந்தது.நேற்று மாலை 4.00 மணியளவில் செல்வாநகர் முத்துமாரியம்மன் கோவில் வீதியைச் சேர்ந்த குமாரசாமி மஞ்சுளா தம்பதியினரின் குழந்தையே நீரில் மூழ்கிப் பரிதாபகரமாக மரணமானது. மேற்படி சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது; வீட்டின் அருகில் கிணறு வெட்டுவதற்காக வெட்டப்பட்ட 4அடிக் குழியினுள் மழைநீர் தேங்கிக் கிடந்ததால்

(12ஆம் பக்கம் பார்க்க)



## மாவீரர் நாள் நவம்பர் -27

**"ஒரு விடுதலை வீரனின் சாவு ஒரு சாதாரண மரண நிகழ்வல்ல; அந்தச்சாவு ஒரு சரித்திர நிகழ்வு; ஒரு உன்னத இலட்சியம் உயிர்பெறும் அற்புதமான நிகழ்வு. உண்மையில் ஒரு விடுதலை வீரன் சாவதில்லை; அவனது உயிராக இயங்கி வந்த இலட்சிய நெருப்பு என்றுமே அணைந்து விடுவதில்லை. இந்த இலட்சிய நெருப்பு ஒரு வரலாற்று சக்தியாக மற்றவர்களைப் பற்றிக் கொள்கிறது. ஒரு இனத்தின் தேசிய ஆன்மாவைத் தட்டியெழுப்பி விடுகின்றது".**

தமிழீழத் தேசியத்தலைவர்
மேதகு வே. பிரபாகரன் அவர்கள்.

## திறைசேரி முன்னாள் தலைவருக்கு எதிராக ஒன்பது குற்றச்சாட்டுக்கள்

(கொழும்பு)

திறைசேரியின் முன்னாள் தலைவருக்கு எதிராக இலஞ்ச ஊழலுக்கு எதிரான ஆணைக்குழுவினால் மேல் நீதிமன்றத்தில் 9 குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது பிரதிவாதியான சரத் சந்திர சிரிசேன, தமது பதவிக்காலத்தின் போது திறைசேரியின் நிதியை தனியார் வங்கியில் வைப்புச் செய்ததாகவும் அதன் நிமித்தம் பெருந்தொகை இலஞ்சத்தைப் பெற்றுக்கொண்டதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளார். இந்த நிலையில் இந்த வழக்குத் தொடர்பில் எதிர்வரும் டிசம்பர் 16 ஆம் திகதி மன்றில் ஆஜராகுமாறு நீதிபதி சரத் அம்பேபிட்டிய உத்தரவிட்டார். (32)

## வரிவிளம்பரம்

### அறிவித்தல்

அப்பன்இரும்புத் தொழிலகம் டிப்போ வீதி,கிளிநொச்சி (மாவீரர் துயிலும்இல்லவீதி) சுருக்குகேற் மற்றும் சகலவிதமான கேற்வகைகள். யன்னல் கிறில்றைஸ் போன்றவை செய்துகொடுக்கப்படும்.

(சி-10756)

# வைரவப் புளியங்குளத்தில் உள்ள அரச காணியை சிங்கள ப.நோ.கூ.சங்கத்திற்கு வழங்கத்திட்டம்

(வவுனியா செய்தியாளர்)

வைரவப்புளியங்குளத்தில் உள்ள ஒரு ஏக்கர் அரச காணியை வவுனியா சிங்கள பல நோக்கு கூட்றவுச் சங்கத்திற்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளதனை வவுனியா வைரவப் புளியங்குளம் கிராம அபிவிருத்திச் சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது குறித்து வைரவப் புளியங்குள கிராம அபிவிருத்திச் சங்கம் வவுனியாஅரசஅதிபர் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல் துறையினர் உள்ளிட்ட பலருக்கும் இது தொடர்பாக கடிதம் அனுப்பி உள்ளது. இக்கடிதத்தின் விபரம் வருமாறு:- வவுனியா புகையிரத நிலைய வீதியில் அமைத்துள்ள அரச காணியை வவுனியா சிங்கள பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிகின்றோம். எமது கிராமத்தினுள் உள்ள காணியை எமக்கு தந்துதவினால் அக்காணியில் பொதுநோக்குமண்டபம்ஒன்றினை அமைத்துப் பொதுத்தேவைகளுக்குப் பயன்படுத்த முடியும். இதன் மூலம் தமிழ்ப்பகுதியில் திட்டமிட்ட சிங்கள ஊடுருவலையும் தடுத்து நிறுத்தமுடியும் என அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது. (10)

## கருத்தமர்வுகள்

அரச திணைக்களங்களில் கடமையாற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களிடையேயான புலமையினை மேம்படுத்துமுகமாக கருத்தமர்வுகள் நடத்தப்படவுள்ளன.

எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் மூன்று தினங்களிற்கு இடம்பெறவுள்ள இச்செயலமர்வில் துறைசார்நிபுணர்கள் விரிவுரைகளை நடத்தவுள்ளனர்.

யாழ்.செயலக மாநாட்டு மண்டபத்தினில் இடம்பெறவுள்ள இக்கருத்தமர்வுகளிற்கு "நீர்ப்" அமைப்பு நிதி உதவியினை வழங்கியுள்ளது (27)

# கிளிநொச்சி மாவட்டத்தில் புகைப்படச் சங்கம் தெரிவு

கிளி/மாவட்டத்தில் உள்ள புகைப்படக் கலையகங்கள் அனைத்தையும் உள்ளடக்கி புகைப்பட சங்கம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இச் சங்கத் தெரிவு கிளி.மாவட்டதொழிற்சங்கப் பொறுப்பாளர் போர்ப்பிரியன் தலைமையில் நடைபெற்றது. இதில் கிளி.மாவட்ட [illegible] அரசியல் நிர்வாகப் பொறுப்பாளரும் கலந்து கொண்டார். இத்தெரிவில் அனைத்து புகைப்படக் கலையக உரிமையாளர்களும் கலந்து கொண்டனர். இதன் தலைவராக க.சபேஸ், செயலாளராக இ.விஜயபாலு, பொருளாளராக மணிவண்ணன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இத் தெரிவு கிளி.மாவட்ட அரசியல் துறைச் செயலகத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இதுவரை பதிவுகளை மேற்கொள்ளாதவர்கள் இச்சங்கத்தில் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

# சாவு அறிவித்தல்

## இராமசாமி வள்ளியம்மா

அன்புச்சோலை மூதாளர் பேணலகத்தினால் பராமரிக்கப்பட்டு வந்த மாவீரர் கமலன் அவர்களின் தாயாரான இராமசாமி வள்ளியம்மா அவர்கள் 15.11.2004 ஆம் திகதி திங்கட்கிழமை இறைபதம் எய்திவிட்டார். அன்னார் இ.கோவிந்தசாமி, இ.கிருஸ்ணபிள்ளை, இ.சிங்கராசா, இ.கந்தசாமி, இ.இராசேந்திரம், இ.மூர்த்தி இ.தனலட்சுமி ஆகியோரின் தாயாரும், மாவீரர் இந்துராணி, வளவன் ஆகியோரின் அம்மம்மாவும் ஆவார். அன்னாரின் ஈமக் கிரியைகள் அன்புச்சோலை மூதாளர் பேணலகத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக 16.11.2004 காலை 10.00 மணிக்கு கனகபுரம் இந்து மயானத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதை அறியத்தருகின்றோம். இத்தகவலை உற்றார் ,உறவினர்கள், போராளிகள் யாவரும் ஏற்றுக் கொள்ளும் வண்ணம் வேண்டுகின்றோம்.

**அன்புச்சோலை மூதாளர் பேணலகம்,**
**கனகபுரம், கிளிநொச்சி.**

(10618)

## அவசர கலந்துரையாடல்

தனியார்கல்வி நிலையங்கள் தனியார் கணினி நிலையங்களின் நிர்வாகிகளுடன் 2005ஆம் ஆண்டு செயற்பாடுகள், ஏனைய நிர்வாகச் செயற்பாடுகள் தொடர்பாக முக்கிய விடயங்கள் குறித்து கலந்துரையாடப்படவுள்ளதால் நாளை புதன்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நிர்வாகிகளை கிளி. மாவட்ட அரசியல்துறைச் செயலகத்திற்கு (கிளிநொச்சி சந்தைஅருகாமை) வருகைதருமாறு கிளி.மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

## சமாதான ஒன்று கூடல்

(வவுனியா செய்தியாளர்)

யாழ்.பல்கலைக்கழகத்தின் முப்பதாவது அகவையை முன்னிட்டு மன்னார் மாவட்ட அனைத்து பல்கலைக்கழக பட்டதாரிகளும் சமூகநம்பிக்கை நிதியமும் இணைந்து மன்னார் நகரசபை மண்டபத்தில் இன்று சமாதான ஒன்றுகூடல் ஒன்றினை நடாத்தவுள்ளது.

இதுபிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறவுள்ளன. இச் சமாதான ஒன்றுகூடலில் முதன்மை விருந்தினராக யாழ்.பல்கலைக் கழக வவுனியா வளாக பீடாதிபதியும், சிறப்பு விருந்தினர்களாக வவுனியா அரச அதிபர் கணேஷ் அவர்களும், வி.விஸ்வலிங்கம் அவர்களும்,கௌரவ விருந்தினர்களாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (10)

# வீர வணக்கம்

## 04 ஆம் ஆண்டு நினைவலைகளில்

தாயின்மடியில் 22.01.1974



தாயகமண்ணில் 16.11.2000

**தமிழீழத் தேசியத்துணைப்படை வீரர்**

## ஜெகன்

**சுந்தரம் ஜெகன்**

**நி.மு:-யாழ்.மாவட்டம்**

**த.மு:-இளங்கோ குடியிருப்பு, 4ஆம் யுனிற், மல்லாவி.**

16.11.2000 அன்று விளாத்திக்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்துடனான பதுங்கித்தாக்குதலின் போது வீரச்சாவடைந்தார். இம் மாவீரருக்கும் இந்நாளில் வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களுக்கும் எமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

"தமிழீழகாவல்துறை சிறப்புப்படையணியினர்"

# தொழிற் பயிற்சிக் கல்வி

## கடைச்சல், ஒட்டுதல், பொருத்துதல், மரவேலை, உலோகவியல்

ஆகியதொழிற்கல்வியையும்,பட்டறிவையும் பெற விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள் :-**
**அகவை :- 18-23 இருபாலரும்**
**கல்வி :- ஆண்டு 08**

* வன்னியை வதிவிடமாகக்கொண்டவர்கள் விரும்பத்தக்கது.

மேற்குறிப்பிட்ட தகைமைகள் அடங்கிய விபரத்துடன் தங்கள் முகவரியினையும் தவறாது குறிப்பிட்டு அனுப்பி வைக்கவும்.

* தங்குமிடவசதி செய்து தரப்படும்.
* உதவுத்தொகையாக ரூபா 4000/= வழங்கப்படும்.
* உங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்.

விண்ணப்பங்களை 01.12.2004 முன்னதாக ஈழநாதம் யாழ்சாலை கிளிநொச்சி என்ற முகவரிக்கு அனுப்பவும். கடித உறையில் இடது பக்க மேல்மூலையில் விளம்பரம் இல.50 எனக் குறிப்பிடவும். நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்படும்.

(5276)

# பணிநிலை வேண்டுகை

தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவைக்கு பின்வரும் பணிநிலைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. பணிநிலை:- சாரதி**

இடங்கள்:- பூநகரி ஆழியவளை, ஐயன்கன்குளம், அளம்பில், கற்சிலைமடு, மாங்குளம்
வயது :- திருமணமாகாத பெண்கள் அல்லது 40 தொடக்கம் 55 வயதுக்குட்பட்ட ஆண்கள்.
தகைமை:-

1. தரம் 08இற்கு மேல் கல்வி கற்றிருத்தல் வேண்டும்.
2. தமிழீழ அல்லது சிறிலங்கா சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருத்தல்வேண்டும்.
3. இரண்டு வருடங்களிற்கு மேற்பட்ட சாரதி அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

குறிப்பு:- அந்தந்த இடங்களைச் சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது.

**02. பணிநிலை:- சிற்றூழியர்**

வயது :- 18 தொடக்கம் 40 வயதிற்குட்பட்டவர்கள்
சம்பளம் :- நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

**03. பணிநிலை:- விடுதி பராமரிப்பாளர்**

தகைமை :- தரம் 08இற்கு மேல் கல்வி கற்றிருத்தல் வேண்டும்.
வயது :- 18 தொடக்கம் 40 வயதிற்குட்பட்டவர்கள்

**04. பணிநிலை:- சமையலாளர்**

தகைமை :- உள்ளூர், மேலைத்தேய உணவுகளை தயாரிக்கக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
வயது :- 25 தொடக்கம் 40 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

**05. பணிநிலை:- காவலாளி**

வயது :- 40 தொடக்கம் 55வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

மேற்படி பணிநிலைக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தங்கள் விண்ணப்பங்களை நடுவப்பணியகம், தியாக தீபம் திலீபன் மருத்துவசேவை, கிளிநொச்சி என முகவரியிட்டுக் கடித உறையின் இடது பக்க மேல் முலையில் பணிநிலை வேண்டுகை எனக் குறிப்பிட்டு 2004.11.30 ஆம் திகதிக்கு முன் எமக்கு கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கவும்.

**பொறுப்பாளர்,**
**தியாகதீபம் திலீபன் மருத்துவசேவை,**
**கிளிநொச்சி**

(சி-10617)

# பலூஜா நகர் முழுவதும் அமெ.படையினர் வசம்

## பாதுகாப்பு அமைச்சர் ரம்ஸ்பீல்ட் அறிவிப்பு

### -ஈராக் தீவிரவாத அமைப்புக்கள் நிராகரிப்பு

(வோஷிங்டன்)

**ஈராக்கில் தீவிரவாதிகளின் பிடியில் சிக்கியிருந்த பலூஜா நகரை அமெரிக்க இராணுவத்தினர் முழுமையாகக் கைப்பற்றியுள்ளதாக அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் ரம்ஸ்பீல்ட் தெரிவித்துள்ளார். இந்த அறிவிப்பை தீவிரவாத அமைப்புக்கள் நிராகரித்துள்ளன.**

கடந்த ஒரு வாரமாக இந்த நகரை மீட்க அமெரிக்க இராணுவத்தினரும், ஈராக் அரசுப் படையினரும் தீவிர தாக்குதலை மேற்கொண்டு வந்தனர். இந்தத் தாக்குதலில் அமெரிக்க இராணுவவீரர்கள் 24பேர் உயிரிழந்தனர். தீவிரவாதிகள் தரப்பில் 1000பேர் இறந்தனர். தீவிரவாதிகள் மறைந்திருந்த பதுங்கு குழிகளை அமெரிக்க இராணுவத்தினர் அழித்தனர். எனினும் இப்பகுதியில் பதுங்கியிருந்து தாக்குதலில் ஈடுபட்டு வந்த ஜோர்தானைச் சேர்ந்த அபுமுசாம், அல்-ஜர்காவி மற்றும் அப்துல்லா, அல்-ஜனாபி ஆகியோரின் அணிகள் அமெரிக்கப்படையினரிடம் சிக்காமல் தப்பி விட்டனர்.


பலூஜா நகரம் அமெரிக்கப்படையினர் வசம் வந்துவிட்டபோதிலும், இன்னும் சில இடங்களில் எதிர்ப்பு நிலவுவதாக அமெரிக்கப் பாதுகாப்புத்துறை அமைச்சர் ரம்ஸ்பீல்ட் தெரிவித்தார். தீவிரவாதிகள் அனைவரையும் விரட்டியடிக்கும் பணி ஓரிரு நாளில் முடிவடையும் என்றும் அவர் கூறினார். இதற்கிடையில் பலூஜா நகரின் மையப்பகுதியில் நேற்று தீவிரவாதிகள் வைத்திருந்த கண்ணிவெடியில் சிக்கி அமெரிக்க படையினர்கள் 3பேர் உயிரிழந்தனர். 13பேர் காயமடைந்தனர் என்றும் ரம்ஸ்பீல்ட் தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஈராக்கியப் பிரதமர் அயத்அல்லாவி கருத்துக் கூறுகையில், ஈராக்கில் பலூஜா நகரைத் தீவிரவாதிகளிடம் இருந்து கைப்பற்றுவதற்காக நடந்து வரும்போர் விரைவில் முடிவுக்கு வரும் "இந்தப் போரில் அப்பாவிப் பொதுமக்கள் யாரும் பலியாகவில்லை. தீவிரவாதிகளுக்கு எதிரான போரில் இராணுவம் வெற்றிபெற்றுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

பலூஜா நகரம் முழுவதும் அமெரிக்கப் படையினர் வசம் சென்று விட்டதாக வெளியான தகவலை தீவிரவாத அமைப்பின் செய்தித் தொடர்பாளர் அபுசாத் அல்.திமிலி மறுத்துள்ளார். அமெரிக்கப்படையினருக்குக் கடுமையான பதிலடியைக் கொடுத்து வருகிறோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுவரை பலூஜாவில் நடந்த யுத்தத்தை இனி ஈராக் முழுவதும் கொண்டு செல்லப் போகிறோம் என்று ஜர்க்காவி தலைமையிலான தீவிரவாதிகள் ஒரு வீடியோ ரேப் மூலம் அறிவித்துள்ளனர். நேற்று முன்தினம் தீவிரவாதிகள் தரப்பில் அமெரிக்க இராணுவத்திற்கு எதிர்ப்புக் குறைவாக இருந்தது.

அந்த நகரில் உள்ள 3இலட்சம் பொதுமக்களில் பாதிப்பேர், போர் தொடங்குவதற்கு முன்பே ஊரை விட்டுத் தப்பியோடிவிட்டனர். பாக்தாத் விமான நிலையம் காலவரையின்றி மூடப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.



பலூஜாவின் மேற்குப் பகுதிக்கு மேலதிகமாக அமெரிக்கக் கடற்படையினரின் ஒரு தொகுதியினர் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.



அமெரிக்கக் கடற்படையினர் போர் நடைபெறும் பலூஜாநகரில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர்.

# ஏவுகணைகளின் காவு வண்டியாக அமெரிக்க போயிங் விமானம்



(வோஷிஸ்டன்)

அமெரிக்காவில் போயிங் ரக பயணிகள் விமானங்கள் நீண்ட நாட்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டு அவை பழுதடைந்தபின்பு அவற்றை மாற்றி அமைத்து கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை செலுத்தும் வாகனமாகப் பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளனர்.

லேசர் குண்டுகளையும் ஏவுகணைகளையும் ஏந்திச் செல்லும் வகையில் மாற்றி அமைத்து போயிங் விமானத்தை எட்வர்டு விமானப்படைத் தளத்தில் இருந்து பறக்க விட்டனர் அந்த விமானம் வெற்றிகரமாகப் பறந்து சென்று மீண்டும் தளத்துக்கு வந்து விட்டது.

# மாரடைப்பைத் தடுக்கும் ஜாக்கெட்டை அமெ.டாக்டர்கள் உருவாக்கினர்

(வோஷிங்டன்)

குண்டு துளைக்காத ஜாக்கெட்டுகளைப் போல இப்போது மாரடைப்பைத் தடுக்கும் ஜாக்கெட்டை அமெரிக்காவின் ஹூஸ்டன் வைத்தியசாலை டாக்டர்கள் உருவாக்கியுள்ளனர்.

இந்த ஜாக்கெட்டைப் பயன்படுத்துகிறவர்களுக்கு மாரடைப்பு ஏற்படும் ஆபத்து கணிசமாகக் குறைகிறது. இருதயநோய் உள்ளவர்களுக்கு இதயமாற்று ஒப்ரேஷன் செய்ய வேண்டிய அவசியமும் இருக்காது. பொலிஸ்டர் இழைகளால் வலைபோல் பின்னப்பட்டு இருக்கும் இந்த ஜாக்கெட்டை இருதய அறுவைச் சிகிச்சையின் போது மார்பில் பொருத்திக் கொண்டால் ஆபத்துக் குறைகிறது. இதயத்தசைகள் பலவீனமாவதையும் இது தடுக்கிறது. நீண்ட காலம் இந்த ஜாக்கெட்டை அணிவதால் இருதய நோய் நாளடைவில் குணமாகிவிடும் என்று அந்த டாக்டர்கள் கூறியுள்ளனர்.

# பலஸ்தீன இயக்கத் தலைவர் அப்பாஸை கொலை செய்ய எடுத்த முயற்சி தோல்வி

## இரண்டு மெய்க்காப்பாளர் பலி

(காஸா)

யசீர் அரபாத்தின் மறைவிற்கு இரங்கல் தெரிவிக்கும் நிகழ்வில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டில் தற்காலிக அதிபர் முகமது அப்பாஸின் இரண்டு மெய்க்காப்பாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

பலஸ்தீன விடுதலை இயக்க தலைவர் யசீர் அரபாத் பரிஸ் வைத்தியசாலையில் கடந்த 12ஆம திகதி மரணம் அடைந்தார். எகிப்தின் கெய்ரோ நகரில் அவரது இறுதிச் சடங்கு நடந்தபின் பலஸ்தீனத்தின் ரமலா நகரில் அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது.

இந்த நிலையில் மேற்குக் கரையில் காஸா பகுதியில் பலஸ்தீன விடுதலை இயக்க அலுவலகத்தில் அரபாத் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் பலஸ்தீன விடுதலை இயக்கத்துக்குப் புதிதாக நேற்று முன்தினம் தற்காலிகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிபர் முகமது அப்பாஸ் மற்றும் வெளியுறவுத் துறை மந்திரி மற்றும் பலஸ்தீன முக்கிய பிரமுகர்கள் உட்பட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். அப்போது புதிய அதிபருக்கு எதிராக சிலர் கோஷம் போட்டனர். திடீர் என்று சிலர் துப்பாக்கியால் புதிய அதிபரை நோக்கிச் சுட்டனர். இதையடுத்து புதிய அதிபரின் பாதுகாப்பு அதிகாரிகளும் துப்பாக்கியால் எதிர்த் தாக்குதல் நடத்தினார்கள். சில நிமிடங்கள் இந்தத் துப்பாக்கி சண்டை நீடித்தது. இந்தத் துப்பாக்கிச் சண்டையில் புதிய அதிபரின் பாதுகாப்பாளர்கள் 2 பேர் குண்டு பாய்ந்து உயிரிழந்தனர் இன்னும் சிலர் காயம் அடைந்தனர். புதிய அதிபர் முகமது அப்பாஸ் மற்றும் வெளியுறவுத்துறை மந்திரி ஆகியோர் இந்தக் கொலை முயற்சியில் இருந்து தப்பிவிட்டனர்.

இந்தத் தாக்குதலை நடத்தியவர்களும் பலஸ்தீன இயக்கத்தின் ஒரு பிரிவைச் சேர்ந்தவர்கள்தான் என்று தெரியவந்துள்ளது.



கடந்த ஞாயிறன்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டிலிருந்து பாதுகாக்க முகமட் அப்பாஸை பாதுகாப்பான இடத்திற்கு கூட்டிச்செல்கின்றனர். இச்சம்பவத்தில் இரு மெய்ப்பாதுகாவலர்கள் கொல்லப் பட்டதுடன் 5 பொதுமக்கள் காயடைந்தமை குறிப்பீடத்தக்கது.

# நேட்டோவிலுள்ள 10 நாடுகள் ஈராக்கிற்கு படையனுப்ப மறுப்பு

(வோஷிங்டன்)

நேட்டோ அமைப்பின் 10 உறுப்பு நாடுகள் ஈராக்கிற்குப் படையினரை அனுப்ப மறுத்துள்ளன.

எதிர்காலத்தில் மோதல்களை எவ்வாறு எதிர்கொள்வது என்பதற்கு விடை காண்பதில் தோன்றியுள்ள சிக்கல் நிலையே இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

நேட்டோ அமைப்பில் அங்கம் வகிக்கும் 26 நாடுகளில் 10 நாடுகள் இதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளன என்பதை நேட்டோவின் சிரேஷ்ட இராணுவக் கட்டளைத்தளபதி "ஜேம்ஸ் ஜோன்ஸ்" உத்தியோகபூர்வமாக வெளியிட மறுத்துள்ளார்.

இதேவேளை ஈராக்கில் எதிர் வரும் சனவரி மாதம் நடைபெறவுள்ள தேர்தலுக்குப் பின்னர் ஒரு இலட்சத்து 50ஆயிரம் ஈராக்கியப் படையினருக்கு பயிற்சி வழங்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.



அபுஜாவில் கபோனஸ் சனாதிபதி அல்ஹாஜ் ஓமர்பொங்கோ – ஒண்டிம்பா(இடது) நைஜீரிய சனாதிபதி ஒலுசேகன் ஒபசஞ்ஜோவுடன் ஐவரிக்கோஸ்ட் நிலைமைபற்றிக்கலந்தாலோசிக்கின்றார்.

# ஜப்பான் இளவரசி திருமணம் முடிந்ததும் அரச குடும்பத்தை விட்டு வெளியேறுவார்

(டோக்கியோ.)

ஜப்பான் நாட்டின் இளவரசி சாயகோ,சாதாரண அரச ஊழியரைக் காதல் திருமணம் செய்யவுள்ளார். அதன் பின்னர் அவர் அரச குடும்பத்தை விட்டு வெளியேறவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது குறித்து ஜப்பான் நாட்டு பத்திரிகை ஒன்றில் வெளியான செய்தியில் கூறியிருப்பதாவது: ஜப்பான் நாட்டின் மன்னர் அகிஹிட்டோ. இவரது மனைவி ராணி மிச்சிகோ. இவர்களுக்கு மூன்று வாரிசுகள் இதில கடைசி மகள் இளவரசி சாயகோ. நோரி என்று செல்லமாக அழைக்கப்படும் இவருக்கு (35) வயதாகிறது இவருடன் படித்த யோசிகி குரோடா(வயது39)வுடன் இருவருக்கு பழக்கம் ஏற்பட்டது. நாளாடைவில் இது காதலாக மாறியது. இருவரும் வனவிலங்கு ஆராய்ச்சியில் ஆர்வமுடையவர்கள். யோசிகி குரோடா தற்போது டோக்கியோவில் சாதாரண அரச ஊழியராகப் பணியாற்றி வருகிறார். இளவரசி சாயகோ பறவைகள் வாழ்க்கை குறித்து ஆராய்ச்சி மேற்கொண்டுள்ளார். இந்த நிலையில்,காதலர்கள் இருவரும் திருமணம் செய்துகொள்ளத் தீர்மனித்துள்ளனர். திருமணத்துக்குப் பிறகு அரச குடும்பத்தை விட்டு இளவரசி சாயகோ வெளியேற வுள்ளார். ஆனால்,இது குறித்து அரண்மனை அதிகாரிகள் யாரும் வெளிப்படையாகக் கருத்து தெரிவிக்க மறுத்துவிட்டனர்.

# தமிழீழ மாவீரர் நாளை எழுச்சியுடன் அனுஷ்டிக்க முன்னேற்பாடுகள் தீவிரம்

**தமிழீழ மாவீரர் நாளை மிகவும் எழுச்சியுடன் கொண்டாடும் முகமாக பிரதேச ரீதியாக முன்னேற்பாடான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.**

இதனடிப்படையில் கடந்த 29 ஆம் திகதி வன்னேரி வலயத்தில் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் சபாரட்ணம் தலைமையில் முன்னேற்பாட்டு கூட்டம் இடம் பெற்றது.

கடந்த 31 ஆம் திகதி பரந்தன் கால் ஏக்கர் உமையாள்புர மக்களை ஒன்றிணைத்து மாவீரர் நாள் தொடர்பாக போராளி வாணன் தலைமையில் கூட்டம் இடம் பெற்றது. அதேவேளை முதலாம் திகதி கிளி/பரந்தன் இந்து மகாவித்தியாலயத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு பரந்தன் பிரதேசப்பொறுப்பாளர் தமிழ்பரிதியின் தலைமையில ஆலோசனைக் கூட்டம் இடம் பெற்றது.

கடந்த 4 ஆம் திகதி மன்னார் பண்டிவிரிச்சான் மேற்குப் பொது நோக்கு மண்டபத்தில் காலை 10.00 மணியளவில் மடுப் பிரதேச பொறுப்பாளர் தலைமையிலும், வட்டக்கச்சி பிரதேசத்தில் வர்த்தக சங்கத் தலைவர் அம்பாள் தலைமையிலும், கடந்த 5 ஆம் திகதி பாண்டியன்குளப் பிரதேசத்தில் பாண்டியன்குள கோட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் தலைமையிலும், பிரதேச அரசியல் துறைச் செயலகத்திலும் கூட்டங்கள் இடம் பெற்றன. மேலும் முள்ளியவளை மாவீரர் மண்டபத்தில் மாவீரர் துயிலும்இல்ல செயற்பாட்டுக்குழுத் தலைவர் க.ஜெகதீஸ்வரன் தலைமையில் கடந்த 7 ஆம் திகதி மு.ப 9.00 மணிக்கு ஆலோசனைக்கூட்டம் இடம பெற்றது. இதேவேளை புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்குட்பட்ட தேவிபுரம் பகுதியில் அப்பாடசாலை மண்டபத்தில்கிராம தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் தலைமையிலும், பூநகரி கிராஞ்சி அ.த.க பாடசாலை தேசிய எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டிலும் கூட்டங்கள் இடம் பெற்றுள்ளன. மேலும் மாவீரா துயிலும் இல்லங்கள், பொது இடங்கள் எனப் பொது மக்கள் அரச அரசசார்பற்ற நிறுவனப் பணியாளர்களால் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டும் வருகின்றன.

(10,ஆ,7,19,மி,12,34)

## விரைவில் திறப்பு

பூநகரி அரசினர் வைத்திய சாலையில் அமைக்கப்படும் வெளி நோயாளர்களிற்கான சிகிச்சைப் பகுதியும், பு,நகரி வாடியடியில் அமைக்கபபட்டுள்ள கால்நடை வைத்திய நிலையமும் விரைவில் திறக்கப்படவுள்ளன. இக்கட்டடங்களின் வேலைகள் பெரும்பாலும் முடிக்கப்பட்டுளளன. (34)



மல்லாவி அனிஞ்சியன் குளம் 2ஆம் பகுதிக்குச் செல்லும் பிரதான வீதியின் மத்தியில் பெரும் பாலைமரம் ஒன்று நீண்டகாலமாகக் காணப்படுகின்றது. மேலும் இப்பகுதியில் நீர் ஓடுவதற்கான வாய்க்கால்களும், அறுத்தோடிகளும் காணப்படுவதால் இரவில் பயணிப்பவர்கள் விபத்துக்களில் சிக்கி பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர். (படம்-அன்ரனி)

## சிராட்டிக்குளம் மக்களின் போக்குவரத்துப் பாதிப்பு

(மல்லாவி)

நட்டாங்கண்டல் பிரதேச சிராட்டிக்குளம் பகுதியில் அண்மையில் பெய்து வரும் கன மழையினால் மேற்படி கிராம மக்களின் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது. சிராட்டிக்குள கிராமத்தில் சுமார் 40 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. பெரும்பாலும் விவசாயத் தொழிலும், கூலித்தொழில் புரிந்து வரும் இம் மக்கள் தங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய 18 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள மல்லாவி நகரிற்கே வரவேண்டும். அண்மையில் பெய்து வரும் மழையினால் பறங்கியாறு பெருக்கெடுத்து பாய்வதால் இம்மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது,

அத்துடன்5 ஆம் ஆண்டு வரையும் உள்ள பாடசாலையில் கல்வி கற்று மேலதிக உயர் கல்விக்காகவும் மருத்துவ தேவைகளுக்கும் நட்டாங்கண்டல் பகுதிக்கே வரவேண்டும். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தில் உடன் கவனம் எடுக்கவேண்டும் என மேற்படி பிரதேசமக்கள் கேட்கின்றனர். (24)

## வாழைச்சேனை பிரதேசத்தில் பாதுகாப்பு அதிகரிப்பு!

(மட்டக்களப்பு)

வாழைச்சேனை பிரதேசத்தில் கடந்த சில தினங்களாக இடம் பெற்று வரும் துப்பாக்கிச்சூடு, கிரனைட் தாக்குதல்களை கட்டுப் படுத்தும் பொருட்டு, இப்பிரதேசத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டுள்ளதாக சிறிலங்காப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

பொலிசாரும், இராணுவத்தினரும் இணைந்து இப்பகுதிகளில் கூட்டுரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதுடன், சந்தேகத்திற்கு இடமானவர்களை உடற் பரிசோதனையும் மேற்கொண்டு வருகின்றனர். இதேவேளை கடந்த 8ஆம் திகதி கிரனைட் வீச்சில் படுகாயமடைந்த அகமட் லெவ்வை (வயது-60), கறுவாக்கேணியில் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் படுகாயமடைந்த புனிதராஜா (வயது-27) ஆகியோர் மட்டக் களப்பு போதனா வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வெள்ளத்தால் பாதிப்புற்றோருக்கு உதவ தமிழர் புனர்வாழ்வுக்கழகம் முன்வருகை

(திருகோணமலை)

வடக்குக்கிழக்கு மாகாணத்தில் தற்போது பெய்துவரும் மழை காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவ தமிழர் புனர்வாழ்வுக்கழகம் முன் வந்துள்ளது.

பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான மீட்புப்பணி, சமைத்தஉணவு வழங்கல், குடிநீர்விநியோகம் ஆகிய உதவிகளை மாவட்ட ரீதியில் அரசாங்க அதிபருடன் இணைந்து மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளை தமிழர்புனர்வாழ்வுக்கழகத்தினர் எடுத்து வருகின்றனர். வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் தொடர்பாக மக்கள் பிரதிநிதிகள், உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களின் நிர்வாகிகள், தமிழர்புனர்வாழ்வுக்கழகத்தின் மாவட்டச் செயலகங்களுடன் தொடர்பு கொள்ளும்படி கழக நிர்வாகம் கோரியுள்ளது. (25)

## ரியூசன் வகுப்புக்களுக்கு தடை!

(திருமலை)

திருகோணமலை நகரில் காலை 7 மணிக்கு முன்பாகவும் மாலை 6 மணிக்குப் பின்பாகவும் ரியூசன் வகுப்புக்கள் நடத்துவது தடை செய்யப்பட்டுள்ளதாக நவயுக மைந்தர் அமைப்பு அறிவித்துள்ளது. இத்தடை நவம்பர் 05 தொடக்கம் நடைமுறையிலிருப்பதாகவும் தடையை மீறி ரியூசன் வகுப்புக்கள் நடத்தப்படுமானால் பாரதூரமான விளைவுகளைச் சந்திக்க நேரும் என்று திருமலை நகரில் ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நவயுக மைந்தர் அமைப்பு என்ற பெயரில் சுவரொட்டி அறிவித்தல் காணப்படுகின்றது. இரவு நேர ரியூசன் வகுப்புக்கள் கலாசார சீர்கேடுகளுக்கு காரணமாக அமைவதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவ்வறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (25)

## வீதிப்போக்குவரத்து தொடர்பான கருத்தூட்டல்

கிளிநொச்சி மத்தியகல்லூரி மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்குமான வீதிப் போக்குவரத்துத் தொடர்பான கருத்தூட்டல் கடந்த 10 ஆம் திகதி நடாத்தப் பட்டது. இக்கருத்தூட்டலில் தமிழீழ காவல்துறையின் வீதிப்போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் சி.சிவகுமாரன், துணைப்பொறுப்பாளர் ஜீவானந்தன் ஆகியோர் வீதி ஒழுங்கு விதிமுறைகள் தொடர்பான கருத்துக்களை வழங்கினார்கள். இக்கருத்தூட்டல் நிகழ்வில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்களும், இருபத்தைந்திற்கு மேற்பட்ட ஆசிரியர்களும் கலந்து கொண்டனர். இக்கருத்தூட்டல் நிகழ்வில் பாதசாரிகள், சாரதிகள், துவிச்சக்கர வண்டி ஓட்டுனர்கள் வீதியைப் பாவிக்கும் முறை பற்றியும், விபத்தைத் தவிர்ப்பது எவ்வாறு என்பது பற்றியும் ஒவ்வொரு நாளும் மாணவர்களுக்கு அறிவுறுத்தும்படி கூறப்பட்டது.



மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் வாசிப்பு மாதத்தை முன்னிட்டு முன்பள்ளி மாணவருக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கிய நிகழ்வு கடந்த 27.10.2004 அன்று மாந்தை கிழக்குப் பிரதேச சபை மண்டபத்தில் அதன் விசேட ஆணையாளர் திருமதி. காந்திறீஸ் கந்தராஜா தலைமையில் இடம் பெற்றபோது பிரதேசத்தின் 07 முன்பள்ளிகளுக்குக் கற்றல் உபகரணங்கள் அதன் ஆசிரியர்களிடம் வழங்கப் பட்டது. (படம்-அன்ரனி)

## முழங்காவில் பிரதேச வைத்தியசாலைக்கு வைத்தியர் ஒருவரை நியமிக்க வேண்டுகை

### 7 தாதியர் வெற்றிடங்களும் உள்ளன

(பூநகரி)

முழங்காவில் வைத்தியசாலை நிரந்தர வைத்தியர் ஒருவர் இன்றி இயங்கி வருகின்றது. அத்தோடு தாதியருக்கும் பெரும் வெற்றிடம் நிலவி வருகிறது.

எட்டுத் தாதிமார் தேவைப்படும் இடத்து ஒரேயொரு தாதியே சேவையாற்றி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

பூநகரியின் தென்பகுதியில் உள்ள இவ்வைத்தியசாலைக்கு ஜெயபுரம், மாதிரிக்கிராமம், சோலை கரியாலை நாகபடுவான், நிலா குடியிருப்பு, ஜெகநாதன் குடியிருப்பு, உப்புவில், இரணைமாதா நகர், நாச்சிக்குடா, குமுழமுனை, கிராஞ்சி, முழங்காவில் ஆகிய கிளிநொச்சி மாவட்ட நோயாளர்களும் வெள்ளாங்குளம், இலுப்பைக்கடவை, தேவன்பிட்டி போன்ற மன்னார் மாவட்ட நோயாளர்களும் வருகை தருகின்றனர். நிரந்தர வைத்திய தாதியர் இல்லாமையால இங்கு வரும் நோயாளிகளிற்கு பல சிரமங்கள் ஏற்படுகின்றன. இவ்வைத்தியசாலைக்குப் பதில் வைத்தியராக வன்னேரி அரசினர் வைத்தியசாலை வைத்தியர் முருகானந்தம் கடமையாற்றுகின்றார். அவர் இல்லாத வேளை வேரவில் வைத்தியர் சிவபாதசுந்தரம் கடமை யாற்றுகின்றார். இந் நிலைமையில் வன்னேரிக்குளம், வேரவில் வைத்திய சாலைகளின் சேவையும் பாதிப்புக்குள்ளாகின்றன. இந் நிலைமை ஏற்படாமல் இருக்க முழங்காவில் வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியர் ஒருவரைதந்துதவு மாறு மக்கள் வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர். (34)

## மாவீரர்களின் நினைவு நிகழ்வு

தமிழீழ கல்விக்கழக மன்னார் மாவட்டப் பொறுப்பாளர் கப்டன் நிக்சன், மேஜர் செங்கோட்டையன் ஆகியோரின் நினைவு நாள் நிகழ்வுகள் மன்னாரில் சிறப்பாக நடைபெறவுள்ளது. 17-11-2004 மன்/அடம்பன் மத்திய மகாவித்தியாலயத்திலும், 18-11-2004 மன்/ பெரிய பண்டிவிரிச்சான் மகாவித்தியாலயத்திலும் நினைவு நாள் நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. (15)

## ஏ-9 பிரதான வீதியின் ஒருபகுதி போக்குவரத்து செய்யமுடியாது பாதிப்பு

(அலுவலக செய்தியாளர்)

ஏ-9 பிரதான வீதியில் புளியங்குளத்திற்கும், கனகராயன் குளத்திற்கும் இடைப்பட்ட வீதி மிகவும் மோசமாக சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது. மேற்படி பிரதான வீதியில் புளியங்குளம் சந்தியிலிருந்து கனகராயன்குளம் நோக்கி வரும் வழியில் 7 கிலோ மீற்றருக்கு உட்பட்ட பகுதியில் பாரிய குன்றும் குழியுமாக வீதி இருப்பதனால் வாகனப்போக்குவரத்து அதிகரித்த இவ்வீதியில் தொடர்ச்சியான போக்குவரத்தினால் மேலும் குழிகள் பெரிதாகி வீதியை பாரிய குன்றும் குழியுமாக்கி அதற்குள் மழைநீர் தேங்கிக் காணப்படுகின்றது. அத்துடன் மழை அதிகமாக பெய்யும் வேளை நீர் வீதியை மூடிப்பாய்கின்ற சில இடங்களும் காணப்படுகின்றன. இதனால் இவ்வீதியூடாகப் பயணிக்கும் பெருமளவான பயணிகள் பெரும் சிரமத்தை எதிர்கொண்டு வருகின்றனர். விபத்துகளும் ஏற்படவாய்ப்பாக உள்ளன. மேலும் இவ்வீதி அண்மைக் காலங்களிலேயே புனரமைப்புச் செய்து முடிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (24,கு)

# சமுர்த்தி செயலணி மேற்கொண்ட ஒப்பந்த வேலைகளில் ஊழல்

## நலன்புரி நிலையங்களைச் சேர்ந்த மக்கள் குறை

(நல்லூர்)

**சமுர்த்தி செயலணி என்ற பெயரில் எடுக்கப்பட்ட பல ஒப்பந்த வேலைகளில் மோசடிகள் இடம் பெறுவதுடன் வேலைகளும் கூட பூர்த்தி செய்யப்படாத நிலைமையும் காணப்படுவதாக நலன்புரி நிலையங்களின் மக்கள் குறைகூறியுள்ளனர்.**

இத்தகைய துர்ப்பாக்கிய நிலைமை யாழ்.குடாநாட்டிலேயே நிலவி வருகின்றது.

இந்த வகையில் உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்கள் சிலவற்றில் மலசலகூடம் கட்டும் பணியை சமுர்த்தி செயலணியின் பெயரில் ஒப்பந்தம் பெறப்பட்டு கிராம அலுவலரும், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் இணைந்து இவ் வேலைத் திட்டத்தை மேற்கொண்டு வருவதாக இடம் பெயர்ந்தோர் நலன்புரிநிலையங்களின் சமாசத்தினர் குற்றம் சாட்டுகின்றனர்.

இதே போன்று யாழ்ப்பாணம் நல்லூர், தீவகப் பிரதேச செயலாளர் பிரிவில் சமுர்த்தி செயலணியின் பெயரில் எடுக்கப்பட்ட நிகொட் திட்டத்தின் கீழான மலசலகூடம், கிணறுகள் நிர்மாணிக்கும் பணியும் முழுமையாக செய்யப்படாமல் அரைகுறையாக செய்யப்பட்டுள்ளதாக பயனாளிகள் குறை கூறுகின்றார்கள்.

இத்திட்டத்திற்கான சிமெந்து யாழ்.செயலகத்தினால் வழங்கப்பட்ட பின்னர் சமுர்த்தி செயலணியினர் சொல்வதைச் செய்தது போன்று பற்றுச்சீட்டுக்கள் முடிக்கப்பட்டதாக சமுர்த்தி செயலணி உத்தியோகத்தர்கள் கூறிகின்றார்கள்.

சந்தை விலையிலும் பார்க்க கூடிய விலையில் அந்தச் சிமெந்துகள் தமக்குக் வழங்கப்பட்டதாகவும் ஒப்பந்த வேலைகளைச் செய்பவர்கள் குறைகூறுகின்றார்கள். உயர் அதிகாரிகள் தமது இலாப நட்டங்களையும் பார்த்து செயற்பட்டுக்கொண்டு மக்களை பல்வேறு துன்பங்களுக்கும் உள்ளாக்கி வருவதாக பொது மக்கள் கூறுகின்றார்கள். (41)

## மக்களின் எதிர்ப்புக்கு பதிலடியாக மாவீரர் பதாகைகளை அறுத்த படையினர்

(தென்மராட்சி)

சிறிலங்காப் படைகளால் தென்மராட்சிப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் தண்ணி பவுசர் கொண்டு மோதி இளைஞர் ஒருவர் கொலை செய்யப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் நடத்திய போராட்டத்திற்கு பதிலடியாக இரவோடு இரவாக சிறிலங்காப் படையினரால் மாவீரர்கள் நினைவாக கட்டப்பட்டிருந்த பதாகைகள் அறுத்தெறியப்பட்டு வெறியாட்டம் ஆடியிருக்கின்றனர்.

பல்வேறு பகுதிகளில் கட்டப்பட்டிருந்த பதாகைகள் அறுக்கப்பட்டு கீழ்த்தரமான செயற்பாடுகளில் சிறிலங்காப் படைகள் ஈடுபட்டு வருவதைக் கண்டு மக்கள் கடும் விரக்தியுற்றுள்ளனர். (28)

## யாழ்.குடாநாட்டில் மரக்கறிவிலை அதிகரிப்பு

(நல்லூர்)

யாழ்.குடாநாட்டில் தொடர்ந்து பெய்து வரும் மழைகாரணமாக மரக்கறிகளின் விலைமிகவும் உயர்ந்து வருகின்றது.

70 ரூபாவில் இருந்த உருளைக் கிழங்கு 90 ரூபா முதல் 100ரூபாய் வரையும், தக்காளிப்பழம் 100ரூபாவாகவும் இதே போன்று கத்தரிக்காய், பயிற்றங்காய் போன்றவற்றின் விலைகளும் மிகவும் உயர்ந்து சென்றுகொண்டே இருக்கின்றன.

வன்னி மற்றும் வெளி மாவட்டங்களில் இருந்து வரும் மரக்கறிகளின் வருகை குறைவதே இப் பொருட்களின் விலை உயர்வுக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கௌரிவிரதம், கந்தசஷ்டி விரதம் போன்றவையும் கூட யாழ்.குடாநாட்டில் மரக்கறிகளின் விலை உயர்வுக்குக் காரணமாக இருக்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (41)

## கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது ஆயிரக் கணக்கான மக்கள் கோப்பாயில் சிரமதானம்

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் கொட்டும் மழையிலும் மக்கள் சிரமதானப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

வலிகாமம் பகுதிக்கு உட்பட்ட பல்லாயிரக்கணக்கான மக்கள் மாவீரர் துயிலும் இல்லப் பகுதியில் பல்வேறு வகையான சிரமதானப் பணிகளையும் முன்னெடுத்து வருகின்றார்கள். நாளாந்தம் நூறு முதல் நூற்றி ஐம்பது பேர் வரை சிரமதானப் பணிகளை மேற்கொண்டு வருகின்றமை சுட்டிக்காட்டக் கூடியதாகும். கோப்பாய் பிரதேசத்திற்கு உட்பட்ட பாடசாலை மாணவ, மாணவிகளும்கூட நாளாந்தம் குறிப்பிட்ட நேரங்களில் சிரமதானப் பணிகளை முன்னெடுத்து வருகின்றார்கள்.


இதேவேளை, மாவீரர் துயிலும் இல்லத்திற்கு செல்லும் உரும்பிராய் - கோப்பாய் வீதி, இராச பாதை கோண்டாவில் இருபாலை வீதி மற்றும் கோண்டாவில் பேருந்துசாலை அருகாமையிலுள்ள வீதி என்பவற்றில் உள்ள பற்றைகளை காணி உரிமையாளர்கள் திருத்தம் செய்து வருவதையும் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. (41)

## படையினர் வீதி ஒழுங்கை மதிக்காததால் உந்துருளி–துவிச்சக்கரவண்டி விபத்து

### - ஒருவர் காயம்; உந்துருளி சேதம்

(தென்மராட்சி)

மீசாலைச்சந்திக்கு அருகே அமைந்துள்ள படைமுகாமிற்கு முன்னால் உந்துருளியில் வந்து கொண்டிருந்தவர்மீது திடீர் என்று ஊடறுத்து துவிச்சக்கர வண்டியில் வந்த சிறிலங்காப்படைச்சிப்பாய் மோதியதில் உந்துருளியில் வந்த சசிகரன் என்பவர் காயங்களுக்குள்ளானதுடன், உந்துருளியும் சேதத்திற்கு உள்ளானது.



இதனால் இப்பகுதி பெரும் பரபரப்பு அடைந்தது. காலை 10 மணியளவில் இந்த விபத்து ஏற்பட்டதால் பெரியளவில் பொது மக்கள் கூடினர்.பெரும் பதட்டமான சூழல் நிலவியது. படைமுகாமிற்கு முன்னால் படையினர் குவிக்கப் பட்டதால் மீண்டும் களேபரம் உருவாகியது. உடனடியாக சம்பவ இடத்திற்கு வருகை தந்த கொடிகாமம் பொலிஸ் அதிகாரி பாதிக்கப்பட்ட உந்துருளி உரிமையாளருக்கு உரிய நட்டஈடு உடனடியாக வழங்குவதாக உறுதியளித்ததற்குப்பின் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் திரும்பியது. (28)

## கசிப்புக்காய்ச்சும் பொருட்கள் வைத்திருந்த இருவருக்கு ஒரு இலட்சத்து 5 ஆயிரம் ரூபா அபராதம்

(நல்லூர்)

கசிப்பு விற்பனை செய்தமை மற்றும் கசிப்பு காய்ச்சும் உபகரணங்கள் வைத்திருந்த குற்றச் சாட்டுகளுக்காக இருவக்கு ஒரு இலட்சத்து 5 ஆயிரம் ரூபா தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் மதுவரித்திணைக் களம் மற்றும் சுன்னாகப் பொலிசாரினால் மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி. சறோஜினி இளங்கோவன் முன் நிலையில் ஆஜர் செய்யப்பட்ட இருவரும் குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து இத் தண்டனைகள் விதிக்கப்பட்டன.

சுன்னாகம்மதுவரித் திணைக் களத்தால் 15 போத்தல் சோடா மற்றும் உபகரணங்களுடன் கைது செய்யப்பட்ட ஏழாலை மேற்கைச் சேர்ந்த சசி, உதயா என்ற பெண்ணுக்கு 65 ஆயிரம் ரூபா தண்டனை விதிக்கப்பட்டது. சுன்னாகப் பொலிசாரால் 5போத்தல் கசிப்புடன் கைது செய்யப்பட்ட குப்பிளானைச் சேர்ந்த நாகேந்திரம் குமுதினி என்ற பெண்ணுக்கு 40 ஆயிரம் ரூபா தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.(41)





யாழ்.பொம்மை வெளிப் பகுதியில் வெள்ளம் காரணமாக மக்கள் வெளியேறிய வீடுகளையும் வெள்ளத்தினுள் மாநகரசபை குடிநீர் தாங்கியினில் தண்ணீர் சேகரிக்கும் மக்களையும் படங்களில் காணலாம்.

## எண்ணெய் நிறுவன வேலை நிறுத்தம் சந்திரிகா அரசுக்கு ஜே.வி.பி. எச்சரிக்கை

சிறிலங்கா அரசுக்குச் சொந்தமான பெற்றோல் நிரப்பு நிலையங்களை தனியார் மயமாக்குவதற்கு ஜே.வி.பியின் தொழிற்சங்கம் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே தனியார் மயமாக்கப்பட்டு விட்ட நிலையில் பெற்றோல் நிரப்பு நிலையங்களின் மீதான சிறிலங்கா அரசின் கட்டுப்பாடுகளை இழக்கும் வகையிலான இந்த தனியார் மயமாக்கலை எதிர்த்து வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்தப் போவதாகவும் அந்த அமைப்பு அறிவித்துள்ளது. ஜே.வி.பி. தொழிற்சங்கத் தலைவர் லக்ஷ்மன் ஆனந்தா இதைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறியுள்ளதாவது; சிறிலங்கா மின்சக்தி மற்றும் எரிபொருள் துறை அமைச்சர் சுசில் பிரேமஜெயந்தவுடன் இது தொடர்பான பேச்சுகள் அதிருப்தி அளிக்கின்றன. இப்பொழுது எங்கள் முன்னுள்ள ஒரே வாய்ப்பு வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்துவதுதான்.

இந்த வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தப்பட்டால் சிறிலங்காவின் படைத்துறை உள்ளிட்ட பெரும் பகுதியில் கடும் பாதிப்புக்கள் ஏற்படும் என்றும் கூறியுள்ளார்.

இதனிடையே இந்த வேலை நிறுத்த எச்சரிக்கையை நிராகரித்த சிறிலங்கா அமைச்சர் சுசில், இம்முடிவு தவறானது என்றும் இது தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அறிவித்துள்ளார்.


## அரிசி இறக்குமதி தாமதம் விலை மேலும் அதிகரிக்கப்படும்!

(கொழும்பு)

இந்திய மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படவிருந்த 30 ஆயிரம் மெற்றிக்தொன் அரிசி சிறிலங்கா வந்து சேர்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளதால் அரிசியின் விலை மேலும் அதிகரிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் பண்டிகைக் காலத்தை கருத்தில் கொண்டு குறைந்த விலையில் மக்களுக்கு அரிசியை பெற்றுக்கொடுக்கும் நோக்கிலேயே 30ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்ய வர்த்தக நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. ஆனால் தற்போது இந்தியா-பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் கப்பல்களில் அரிசியை ஏற்றுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளமையால் பண்டிகைக் காலங்களிலும் அரிசி வந்து சேராதென தெரிவிக்கப்படுகிறது. எனவே பண்டிகைக்காலங்களில் அரிசி ஒரு கிலோவின் விலை 60 ரூபாவாக உயரும் என எதிர் பார்க்கப்பட்டுள்ளது.

# பனை அபிவிருத்திச் சபை தமிழர் தாயகத்திற்கு உரியதா?



1972 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ப.தெ.வ.கூ சங்கங்களின் வளர்ச்சி கருதி 1978 இல் பனை அபிவிருத்திச் சபை ஆரம்பிக்கப்பட்டது. இதன் நோக்கம் பனை தொழில் வல்லுநர்களின் வாழ்வு மேம்பாட்டிற்கான வழிகாட்டல் வழங்குதல் அதற்கான திட்டங்கள் தயாரித்தல் பனம் பொருள் உற்பத்தி நிபுணத்துவம், பனை வளஆராய்ச்சி, பனை வள அபிவிருத்தி, பனம் பொருள் சந்தைப்படுத்தல் நவீன தொழில்நுட்ப முறைகள் அறிமுகப்படுத்தல் போன்ற நோக்கங்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட இச்சபை இன்று அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படுகின்ற ஒரு சபையாக மாறிவருவது இத்துறை சார்ந்த ஏனைய நிறுவனங்களுக்கு அதிருப்தியை ஏற்படுத்தி வருகிறது.

குறிப்பாக மேற்குறித்த சிறப்புப்பிரிவுகள் பனை அபிவிருத்தி சபையில் இருந்த போதும் இவை அனைத்தும் செயலிழந்து உறங்கும் நிலையில் கிடக்கின்றன. காரணம் சம்பந்தப்பட்ட துறைசார் நிபுணர்கள் சபையினுடைய செயற்பாட்டில் மன முடைந்து வேறு பதவிகளுக்குச் சென்றுள்ள நிலைமையையும் பனை வளத்தின் பயனைப்பற்றித் தெரியாத பலர் சபையின் பொறுப்பான கதிரைகளை அலங்கரிக்கும் நிலையும் பனைவள அபிவிருத்தியைக் குன்றச்செய்துள்ளது.

சிறிலங்கா அரசின் அமைச்சின் கீழுள்ள இச்சபை பனைவளத்தைத் தமது ஜீவனோபாயமாகக்கொண்ட 40,000 இற்கு மேற்பட்ட தமிழீழப் பிரதேசத்தில் வாழுகின்ற பயனாளிகளைப் பற்றி எள்ளளவும் சிந்திக்காது இருப்பது தமிழர் தாயகத்தில் ஓர் பனை அபிவிருத்தி சபையை உருவாக்கத் தூண்டும் நடவடிக்கையாகவே அமைகிறது.

பனை வள அபிவிருத்தி சபைக்கென ஒதுக்கப்படும் அரச நிதி வெறுமனவே பணியாளர் சம்பளத்துடன் முடிவடைகின்ற நிலை கடந்த பல ஆண்டுகளாக உள்ளமை சிறிலங்கா அரசு ஒரே ஒரு தமிழர்களின் சபையாக உள்ள இப்பனை அபிவிருத்திச் சபையை திட்டமிட்டுப் புறக்கணிப்பதன் மூலம் தமிழர் தாயக அபிவிருத்தியைப் புறக்கணிக்கும் நடவடிக்கையாகவே அவதானிக்க முடிகிறது. இந்த நடவடிக்கைக்கு தமிழ் அமைச்சொன்று துணை போவது தமிழர்களுக்கான துரோகம் இழைக்கும் செயலாகவே அவதானிக்க முடிகிறது. இவ்வாறான நிலை தொடர்ந்து நடைபெறுமேயானால் இச் சபையானது தமிழ் பேசும் மக்களிடமிருந்து அந்நியப்படும் அவ்வாறு அந்நியப்படுத்தும் நோக்கமாகவே தற்போது யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தலைமைச் செயலகத்தில் இருந்த உத்தியோகத்தர்கள் கொழும்பிற்கு மாற்றப்படுவதும் தலைமைச் செயலகம் கொழும்பில் அமையவுள்ளதுமான செய்திகள் பனம் தொழில்சார் மக்கள் மனங்களில் பனை அபிவிருத்தி சபை மீது வெறுப்பை ஏற்படுத்தியுள்ளது. பனை அபிவிருத்தி சபை இவ்வாறான நடவடிக்கையை மேற்கொள்வது தமிழ்த்தேசிய விருட்சம் ஒன்றின் அபிவிருத்தி பற்றி சிந்திக்காத நிலைமையும் தமிழர் தாயக நிலப்பரப்பின் அபிவிருத்தியினையும் விரும்பாத போக்கையே காட்டி நிற்கின்றது.

எனவே பனை அபிவிருத்திச் சபையின் தலைமைச் செயலகம் தமிழர் தாயக நிலப்பரப்பிலேயே இயங்க வேண்டும். இதன் மூலம் தமிழர் தாயகத்தில் பரந்து நிறைந்திருக்கின்ற பனை வளமும் அதனைப் பயன்படுத்தும் மக்களும் அபிவிருத்தி அடையக் கூடிய செயற்பாடுகள் இச் சபையால் மேற்கொள்ளப்படல் வேண்டும். இந்த நிலையில் இருந்து பனை அபிவிருத்திச் சபை மாறுபட்டு கொழும்பில் தலைமை அலுவலகத்தை வைத்து செயற்பட முயலுமேயானால் தமிழர் தாயகத்தில் தனியான பனை அபிவிருத்திக்கான செயற்பாடுகள் முன்னெடுக்கும் நிறுவனம் ஒன்று உருவாகுவது உறுதியாக்கப்படும் இதனை பனை அபிவிருத்திச் சபையை வழி நடத்தும் அமைச்சும் பனை வள அபிவிருத்தியை புறக்கணித்து வரும் சிறிலங்கா அரசும் கவனத்தில் எடுக்க வேண்டும்

**சி.சிவநேசன்**
**(பாராளுமன்ற உறுப்பினர்)**

## கட்டாக்காலி கால்நடைகளால் காலபோக நெற்செய்கை பாதிப்பு

(பூநகரி)

பூநகரியில் வலைப்பாடு, கிராஞ்சி, வேரவில் பொன்னாவெளி ஆகிய கிராமங்களில் கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லை அதிகமாகக் காணப்படுகின்றது.

பூநகரியில் கட்டாக்காலி கால்நடைகள் 10.10.2004இல் இருந்து கட்டி வளர்க்க அறிவித்தல் விதித்தும், இங்கு கால்நடைகள் சுதந்திரமாக நடமாடி பயிர்களுக்குச் சேதம் விளைவித்து வருகின்றன.

தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழையால் ஏற்கனவே நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளது. தற்போது கட்டாக்காலி மாடுகளின் தொல்லையாலும் விவசாயிகள் பெரும் நஷ்டத்தை எதிர்கொண்டு வருகின்றனர்.

(34)

## சிந்தனைகளை ஒருநிலைப்படுத்தி வாகனத்தை ஓட்டுனர் செலுத்துவது அவசியமாகும்

**-யாழ்.மாவட்ட மோட்டார் வாகன பரிசோதகர் தெரிவிப்பு**

(அலுவலகசெய்தியாளர்)

உணர்ச்சி வசபபட்ட நிலையில் சாரதி ஒருவர் வாகனத்தினை செலுத்திச் செல்லும் ஒவ்வொரு வினாடியும் அவர் ஏதாவது ஒரு ஆபத்தான விளைவினை எதிர் கொள்ளவுள்ளார் என்பதனை உணர்ந்துகொள்வதுடன் வீதியில் பயணிப்போர் உட்பட பயணிக்கும் வாகனங்களுக்கும் உயிர் ஆபத்தினையோ அல்லது சேதத்தினையோ உண்டுபண்ணவுள்ளார் என்பதனை கவனத்தில் கொள்ள வேண்டும்.

இவ்வாறு நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட செயலக மண்டபத்தில் நடைபெற்ற சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கலுக்கான எழுத்துப்பரீட்சையின் பெறுபேறுகள் தெரிவிக்கும் நிகழ்வில் மோட்டார் போக்குவரத்து திணைக்கள போக்குவரத்து உதவி ஆணையாளர் கந்தசாமி தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் 300 இற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

கிளி.அரச அதிபரின் வேண்டுகோளுக்கமைவாக போக்குவரத்துத் திணைக்கள ஆணையாளரின் பணிப்பின் பேரில் இரண்டாவது தடவையாக நடமாடும் சேவை மூலம் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)



யாழ்.மாவட்ட மோட்டார் வாகன பரிசோதகர் ஆர்.எ.ரி குலாஸ் கலந்துகொண்டு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் வாகனங்களை ஓட்டுனர் செலுத்திச் செல்கையில் ஓட்டுனர்களின் சிந்தனைகள் பல்வேறு நிலைகளில் செல்லாது ஒருநிலைப்படுத்தி வாகனத்தை செலுத்துவதிலேயே தனது கவனத்தினை முற்றுமுழுதாகச் செலுத்துதல் அவசியமாகும்.

அப்படிச் செயற்படும் பட்சத்திலேயே தனது சாரதீயத்தினை காப்பாற்றிக் கொள்வதுடன் விபத்துக்கள் ஏற்படுவதனையும் தடுத்துக் கொள்ள முடியும் எனத்தெரிவித்ததுடன், பாடசாலைகளில் அதிபர்களும், ஆசிரியர்களும் பாடசாலை மாணவர்களுக்கு வீதி நடைமுறைகள் குறித்து அறிவுறுத்தல்களை வழங்கி மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த முன்வரவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

கிளிநொச்சி மாவட்ட மோட்டார்

## நவம்பர் 10 முதல் அஞ்சல் கட்டணங்கள் அதிகரிப்பு

(அலுவலக செய்தியாளர்)

கடந்த 10 ஆம் திகதி முதல் உள்ளூர் மற்றும் வெளிநாடுகளுக்கான தபால் கட்டணங்கள் அதிகரித்துள்ளது என தபால் திணைக்களங்கள் தெரிவித்துள்ளன.

இதன் அடிப்படையில் உள்ளூர் தபாற்கட்டணம் 4.50 ஆக இருந்து 5.00 ரூபாவாக அதிகரித்துள்ளது. அதுபோன்று முத்திரைக்கவரின் பழையவிலை 5.00ரூபா புதிய விலை 6.00 ரூபாவாக அதிகரித்துள்ளது.

அடுத்து தபால் அட்டையின் பழைய விலை 3ரூபாவாக இருந்து புதிய விலை 4.ரூபாவாக அதிகரித்துள்ளது. பதிவு செய்யப்பட்ட பத்திரிகை 120 கிராமிற்கு 4 ரூபாவாக இருந்து 8ரூபாவாக அதிகரித்துள்ளது.

பதிவு அஞ்சல் செய்வதற்கு முன்னர் 16.50 ரூபா சதமாக இருந்து தற்பொழுது 20 ரூபாவாக அதிகரித்துள்ளது. கடுகதி அஞ்சல் முன்னர் 16.50 ரூபாவாக இருந்து தற்பொழுது 20 ரூபாவாக அதிகரித்துள்ளது.

மேலும் சார்க் நாடுகள் 07இற்கும் ஒவ்வொரு 10 கிராமிற்கும் முன்னர் 21 ரூபாவாக இருந்து தற்பொழுது 23 ரூபாவாக அதிகரித்துள்ளது. அரபு நாடுகளிற்கு முன்னர் 23 ரூபாவாக இருந்து தற்பொழுது 25 ரூபாவாக அதிகரித்துள்ளது.

அடுத்து ஐரோப்பிய நாடுகளிற்கு முன்னர் 26 ரூபாவாக இருந்து தற்பொழுது 30 ரூபாவாக அதிகரித்துள்ளது. அமெரிக்கா கனடா போன்ற நாடுகளிற்கு முன்னர் 28 ரூபாவாக இருந்து தற்பொழுது 33 ரூபாவாக அதிகரித்துள்ளது.

அத்துடன் உள்ளூர் பொதிகளுக்குரிய கட்டணம் முன்னர் ஒரு கிலோவிற்கு 20 ரூபாவாக இருந்து தற்பொழுது 30 ரூபாவாக அதிகரித்துள்ளது. எனவே மேற் கூறப்பட்ட கட்டணஅடிப்படை யிலேயே தபால்கள் பதிவு அஞ் சல் மற்றும் பொதிகள் என்பன அனுப்பப்படும் என அஞ்சல் அலு வலகங்களின் அதிகாரிகள் தெரி வித்துள்ளனர்.

(கு)



கிளிநொச்சி மாவட்ட பிரதம தபாலக நுழைவாயிலின் முன்பாகவுள்ள பழைய மதகு ஒன்றின் மீது பார ஊர்தி சென்ற போது மதகு இடிந்ததன் விளைவாக புதைந்துள்ள பாரவூர்தியினையும் நீர்வழங்கல் சபையினரால் குழாய்கள் பொருத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பெற்ற வீதியில் நிலவூற்றுக்காரணமாக பாரஊர்தி ஒன்று புதைந்துள்ளதனையும் படத்தில் காணலாம். (படங்கள்:சோதி)

## கடன் வழங்க வேண்டுகோள்

முள்ளியவளை தெற்கு மாதர் சங்கத்தினால் இவ்வாண்டு காலபோக நெற் செய்கைக்காக வழங்கப்பட வேண்டிய ஜீவனோபாயக் கடன் வழங்கப்படாமையினால் பயனாளிகள் விசனமடைந்துள்ளனர்.

மேற்படி சங்கத்தின் பொருளாளரினால் நிதி மோசடி செய்யப்பட்டதையடுத்து கணக்குப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு மோசடி செய்யப்பட்ட பணத்தை அறவீடு செய்த பின்னரே கடன் வழங்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது. எது எவ்வாறாயினும் காலத்தின் தேவையைக் கருத்தில் கொண்டு உடனடியாக கடன் வழங்கப்பட வேண்டும் எனப் பயனாளிகள் கேட்டுள்ளனர். (ஆ)



# விளையாட்டு அரங்கு


ஜெயந்திரன்

அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான டெஸ்ட் தொடர் பாகிஸ்தானுக்கு எதிரான ஒரு நாள் போட்டி என்பன இந்திய கிரிக்கெட் அணியின் எதிர்காலத்தை கேள்விக் குறியாக்கியுள்ளது.

அத்துடன் இனிவரும் அடுத்தடுத்த தொடர்களில் இந்திய வீரர்கள் எதனை சாதிக்கப் போகின்றார்கள் என்ற தோற்றப்பாட்டை ரசிகர்கள் மனதில் ஏற்படுத்தியுள்ளது.



கிரிக்கெட் உலகமே ஆவலுடன் எதிர்பார்த்த அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரை பறிகொடுத்து வரலாறு ஒன்றை இழந்த இந்திய அணி கிரிக்கெட்டில் பரம வைரியான பாகிஸ்தான் அணிக்கு எதிரான ஒரு நாள் போட்டியையும் பறிகொடுத்து அணியை பொறுத்து சங்கடமான ஒன்றாகவே அமைந்துவிட்டது.



இது இந்தியஅணியை மாற்றங்களுக்கு உட்படுத்துமா என்ற கருத்து நிலவினாலும் அதற்கான சாத்தியக்கூறுகள் அரிதாகவே காணப்படுகின்றது.

இதில் அணித்தலைவரை மாற்றுவதா அன்றி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களை மாற்றுவதா, அன்றி பந்து வீச்சு வீரர்களை மாற்றுவதா என்பதில் குழப்பமான நிலையே தென்படுகின்றது.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தோல்வியை அடுத்து அணிக்கு புதிய வீரர்கள் அழைக்கப்பட்டனர். ஆனால் அவர்கள் இன்றும் 20 பேர் கொண்ட அணியிலேயே உள்ளனர். அவர்களில் ஒருவருக்கு மாத்திரமே வாய்ப்பு கொடுக்கப் படுகின்றது. அவர் அதில் பிரகாசிக்கத் தவறுகையில் அடுத்த போட்டியில் நீக்கப்படுகின்றார். அதனைவிட நன்றாகப் பிரகாசிப்பவரும் நீக்கப்பட்டு விடுகின்றார். இது இந்திய அணியை பொறுத்து திறமைக்கு இடம் என்பது நிராகரிக்கப்பட்ட ஒன்றாகவே உள்ளது.

## ஏன் இந்த ஏமாற்றம்

குறிப்பாக தமிழ் நாட்டைச் சேர்ந்த சகல துறை வீரர் சிறிதரன் சிறிராம் அணிக்கு உள்வாங்கப்பட்ட போதும் பதினொரு பேர் கொண்ட அணியில் இன்னும் இணைக்கப்படவில்லை.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரிலாவது இணைக்கப்படுவாரா என்று எதிர்பார்த்த போதும் அதிலும் அவர் இணைக்கப்படவில்லை.

எனவே இந்திய அணியில் தென்னாபிரிக்கா அணிக்கு எதிரான போட்டியில் பலத்த மாற்றம் ஒன்று ஏற்படும் என்று கூறமுடியாத நிலையே உள்ளது.

தென்னாபிரிக்கா அணி முன்னரை விட பலமிழந்து போய் இருப்பது மட்டும் உண்மை. அது தற்போது புதிய பயிற்றுனருடன் களமிறங்குகின்றது. எனவே குறைத்து மதிப்பிட முடியாது மீண்டும் புது வேகத்தை காண்பிக்கலாம். இது இந்திய அணிக்கு நெருக்கடியைக் கொடுக்கலாம்.

எது எவ்வாறு இருப்பினும் தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரின் முடிவை பொறுத்தே இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் கங்குலியின் எதிர்காலம் தங்கியுள்ளது என்பதை மட்டும் உறுதியாகக் கூறமுடியும்.

ரசிகர்களின் வெறுப்பை சம்பாதித் துள்ளது.

அரசியல் பிரச்சினைகளால் பாகிஸ்தான்- இந்திய அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டிகள் கடந்த சில ஆண்டுகளாக துண்டிக்கப்பட்ட நிலையில் ஐந்தாண்டுகளின் பின்னர் முதல் தடவையாக இந்தியா வந்த பாகிஸ்தான் அணி, இந்திய கிரிக்கெட் சபையின் 75ஆம் ஆண்டு நிறைவை சிறப்பிக்கும் வகையிலான சிறப்பு ஒரு நாள் போட்டியில் வெற்றி பெற்று கோப்பையைக் கைப்பற்றி மகிழ்ச்சியுடன் நாடு திரும்பி விட்டது. இது தமது சொந்த மண்ணில் இவ் ஆண்டு ஆரம்பத்தில் இந்திய அணியிடம் அடைந்த தோல்விக்கு பழி தீர்க்கும் வகையில் அமைந்ததுடன் இந்திய அணியை தொடர்ச்சியாக நான்கு ஒரு நாள் போட்டியில் தோற்கடித்த பெருமையையும் ஏற்படுத்தியுள்ளது.

இது அணித் தலைவர் இன்சமாம் உல்-ஹக் மீது நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளதுடன் பாகிஸ்தான் அணிக்கான சிறந்த அணித்தலைவர் என்ற கௌரவத்தையும் அவருக்குப் பெற்றுக்கொடுத்துள்ளது.

ஏற்கனவே சொந்த மண்ணில் இந்திய அணியிடம் அடைந்த தோல்விக்குப் பின்னர் இந்திய அணி எதிர்கொண்ட நான்கு ஒருநாள் போட்டியிலும் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றுள்ளமை இந்திய

## புதிய அவதாரம்

உலகின் முன்னணி கால்பந்து வீரர்களில் ஒருவரான டேவிட்பெக்காம் சர்வதேச புகழ்பெற்றவர். இங்கிலாந்து கால்பந்து அணித் தலைவர் அவர். ஸ்பெயினின் ரிபல் மட்கிட் கழக அணிக்காகவும் விளையாடுகிறார்.



அவரது நடை உடை பாவனைகளை அப்படியே பின்பற்ற இளைஞர் பட்டாளம் ஆவலாகக் காத் திருக்கும். "பென்ட்கிட் லைக் பெக்காம்" என்று அவர் பெயரில் சினிமா கூட வெளி வந்துள்ளது.

ஐஸ்வர்யா ராய் நடித்த "பிரைட் ஆண்ட் பிரிசிடீஸ்" ஆங்கில சினிமா வெளியிட்டிருக்கும் குரிந்தர் சந்தா இயக்கிய சினிமா அது. சரி இப்போது பெக்காம் சினிமாவில் நடிக்கப் போவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

கால்பந்து களங்களில் கலக்கியவர் இனி வெள்ளித் திரைகளிலும் கலக்கப்போகின்றார். இதற்கான பேச்சுவார்த்தைகள் ஏறக்குறைய முடிந்து விட்டதாம்.

சினிமா என்றதும் விறுவிறுப்பான ஜேம்ஸ் பாண்ட் படம் போல கற்பனை செய்து விடக்கூடாது. இது கால்பந்து சம்பந் தமான சினிமா பெயர் கூட வைத்துவிட்டார்கள். பெக்காம் நடிக்கப்போகும் ஆங்கிலத் திரைப்படத்தின் பெயர் கோல். ரியல் மாட்ரிட் அணியில் அவருடன் இணைந்து விளையாடும் ஜினான் கிடேன்(பிரான்ஸ் தேசிய கால்பந்து அணித்தலைவர்)ரால் ஆகியோரும் கூட பெக்காமுடன் இணைந்து நடிப்பதாகவுள்ளது.

இதெல்லாம் உண்மைதானா? பெக்காமிடம் கேட்டபோது உண்மைதான். கால்பந்து வீரராக நான் ஓய்வுபெற்ற பின்னர் இளைய தலைமுறை வீரர்களை உருவாக்கும் பணியில் ஒரு பயிற்சி முகாம் ஆரம்பிக்கத் திட்டமிட்டிருக்கின்றேன். இந் நோக்கத்திற்கு மேலும் வலுச்சேர்ப்பதாக இந்தச் சினிமா வாய்ப்பு அமைந்துள்ளது.

காரணம் சினிமாவில் ஒரு கருத்தைச் சொன்னால் அது மேலும் விரைவாகவும் அதிகமாகவும் மக்களைப் போய்ச்சேரும் தானே என்கிறார்.

## நம்பிக்கை நட்சத்திரம்



சிறிலங்காவில் சிறந்த வேகப்பந்து வீச்சாளராக சமிந்தவாஸை மட்டும் கூறலாமா?

இந்தக் கேள்விக்கு இல்லை என்று கூறி சிறிலங்கா கிரிக்கெட் அணியின் ஆரம்ப பந்துவீச்சாளர்கள் பற்றி சிந்திக்கவேண்டும்.

சிறிலங்காவின் முதலாவது வேகப்பந்து வீச்சாளராக அறிமுகமானவர் டொமிகெலார்ட் என்பவராவார். இடது கை வீரரான அவர் தனது (1891-1913) தசாப்த காலத்தில் சிறந்து விளங்கினார். அவரின் விசேட திறமையாதெனில் உலக சாதனையாளராகத் திகழ்ந்த துடுப்பாட்ட வீரரும் லோட்ஸ்ஷெபீல்ட் கழகத்தைச் சேர்ந்தவருமான கிறேஸ் என்பவரை முதலாவது பந்தில் ஓட்டம் பெறாமல் ஆட்டமிழக்கச் செய்தமையாகும்.

டொமிகெலார்ட் தனது கிரிக்கெட் வாழ்க்கையில் 1234 விக்கெட்டுக்களை வீழ்த்தியதுடன் ஒரு போட்டியில் என்.சி.சி. அணிக்கு எதிராக நான்கு நாள் போட்டி ஒன்றில் 17 ஓட்டங்களுக்கு 13 விக்கெட்டுக்களையும் வீழ்த்தி சாதனை படைத்தார். அவரது சராசரி 5.9ஆகும். அவர் ஒரு இனிங்சில் 10 விக்கெட்டுக்களை வீழ்த்தாவிட்டாலும் 6 முறை 9 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார்.

இவருக்கு அடுத்தபடியாக வேகப்பந்து வீச்சாளராகக் கருதப்படுபவர் ஜெயசுந்தர ஆவார். இவரும் சிறந்த வேகப்பந்து வீச்சாளராகக் கருதப் படுகின்றார். அக்காலத்தில் (1940) வேகத்தை அளக்கும் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பின் அவரது பந்துவீச்சு வேகம் பதியப்பட்டிருக்கலாம்.

அவர்களைத் தொடர்ந்து வந்த அசந்தாடிமெல், ரவிரத்னாயக்க, வினோதன்ஜோன்ருமேஸ் ரத்னாயக்க, பிரமோதய விக்கிரம சிங்க நுவன்சொய்சா ஆகியோரும் குறிப்பிடத்தக்கவர்களாவர். அதனைத் தொடர்ந்து சமிந்தவாஸ் 1983இல் சிறிலங்கா கிரிக்கெட்டில் அறிமுகமானார். அவர் 1994இல் பாகிஸ்தானுடனான முதலாவது டெஸ்ட் போட்டியில் பங்கேற்றார்.

அதனைத் தொடர்ந்து போட்டிகளில் விளையாடும் வாஸ் சிம்பாப்வேக்கு எதிரான போட்டி ஒன்றில் 19 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுக்களை வீழ்த்திய உலக தரம்வாய்ந்த வீரரானார்.


இவர் 2003ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக்கிண்ணப் போட்டியில் பங்களாதேசுக்கு எதிராக முதல் ஓவரில் முதல் 3 பந்துகளிலும் 3 விக்கெட்டுக்களை வீழ்த்திஹாட்ரிக் சாதனை படைத்தார்.

82 டெஸ்ட் போட்டிகளில் ஆடி 269 விக்கெட்டுக்களையும் 2028 ஓட்டங்களையும் பெற்றுள்ளார். ஒரு இனிங்சில் 5 விக்கெட்டுக்களைப் பெற்ற சந்தர்ப்பங்கள் 9 ஆகும்.இந்நாட்டில் முத்தையா முரளிதரனுக்கு அடுத்த படியாகவுள்ள பந்துவீச்சாளர் சமிந்தவாஸ் என்றால் மிகையில்லை.

## எதிர் பார்ப்பு

கடந்த 2003 ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவில் நடைபெற்ற உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டித் தொடரில் சிறிலங்கா அணியை அரையிறுதி ஆட்டம் வரை கொண்டு சென்றவர் அப்போதைய அணித்தலைவராக இருந்த சனத்ஜயசூரியா ஆவார் ஆயினும் அதன் பின்னர் அவர். தலைமைத்துவத்திலிருந்து நீங்கி விட்டார்.

அன்று சிறிலங்கா கிரிக்கெட் அணிக்கு தலைவரை தேர்ந்தெடுப்பதில் பல பிரச்சினைகள் ஏற்பட்டன. இறுதியில் ஒருநாள் போட்டிகளுக்கு மாவன அத்தபத்துவும், டெஸ்ட் போட்டிகளுக்கு ஹசன்



(குடும்பத்துடன் திலகரட்ண)

திலகரத்னவும் நியமிக்கப் பட்டனர்.

போட்டிகளின் போது நிதானமாகவும், பொறுமையாகவும் துடுப்பெடுத்தாடும் திலகரத்ன அன்று பெரும் சவாலுக்கு முகம் கொடுத்தார். சிறிலங்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட பிரபல அணிகளுடன் பங்கேற்கும் சந்தர்ப்பம் இவருக்கு ஏற்பட்டது. அன்று இங்கிலாந்துடனான டெஸ்ட் தொடரை 1-0 கணக்கில் கைப்பற்றினாலும் அவுஸ்திரேயாவுடனான டெஸ்ட் தொடரை 0-3 என்ற கணக்கில் பறிகொடுத்தார்.

அதன் பின்பு தனது தலைமைப பொறுப்பு பறிக்கப்பட்டாலும் அணியிலிருந்து திலகரத்ன நீக்கப்படவில்லை. ஆயினும் அதன் பின் நடைபெற்ற போட்டிகளில் திலகரத்ன காணாமல் போனமையே தற்போது எழுந்துள்ள பிரச்சினையாகும்.

முன்பு சில காலம் அணியிலிருந்து நீக்கப்பட்டு அண்மையிலேயே அவருக்கு அணித் தலைமை வழங்கப்பட்டது. எனினும் அவரது துடுப்பாட்டத்திலும் குறைகள் காணப்பட்டதாலும் அணி தோல்விகளை சந்தித்ததாலும் அவரின் தலைமைப் பதவி பறிக்கப்பட்டது.

இந் நிலையில் தற்போது சிறிலங்கா அணியில் மத்திய துடுப்பாட்ட வரிசையில் இணைக்கப்பட்டுள்ள திலகரத்ன தில்சான் ஜெகன் முபாரக் ஆகியோரின் துடுப்பாட்டம் எடுபடாத நிலையிலும் திலகரத்ன உள்ளூர் போட்டி களில் திறமையாக ஆடி வருவதாலும் கிரிக்கெட் சபை மீண்டும் அவரை இணைத்துக் கொள்ளும் என்று அவர் எதிர்பார்த்துக் காத்திருக்கிறார். அவரின் எதிர்பார்ப்பை சிறிலங்கா கிரிக்கெட் சபை நிறைவேற்றுமா அன்றி ரொமேஸ்கயுவிதாரண போன்று சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறும் நிலைக்கு இட்டுச் செல்லுமா என்பதை பொறுத்திருந்து பார்க்கலாம்.

# இடைக்கால நிர்வாக யோசனை அடிப்படையில் பேச்சுக்கள் ஆரம்பிக்க இணங்கமாட்டோம்!

## கட்சிகளின் முடிவு!

சனாதிபதித் தேர்தலில் நாட்டின் இனப்பிரச்சினையை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் அரசியல் கட்சிக்கு முழு ஆதரவையும் வழங்கப் போவதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மேல் மாகாண மக்கள் முன்னணி, மலையக மக்கள் முன்னணி அறிவித்துள்ளன என லக்பிம சிங்களப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

## ஜே.வி.பி. மீண்டும் வலியுறுத்துகின்றது

(கொழும்பு)

**இனப்பிரச்சினைக்குச் சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலமே நிரந்தரத் தீர்வைக் காணவேண்டும் என்பதில் மக்கள் விடுதலை முன்னணி உறுதியாக இருக்கின்றது. ஆனால், புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால நிர்வாக அதிகாரசபை யோசனைக்கமைய எக்காரணம் கொண்டும் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க நாங்கள் இணங்கமாட்டோம் என்று மக்கள் விடுதலை முன்னணி மீண்டும் வலியுறுத்தியுள்ளது.**

இது தொடர்பாக ஜே.வி.பி. நேற்று முன்தினம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இனப்பிரச்சினை தொடர்பாக மக்கள் விடுதலை முன்னணி என்ன நிலைப்பாட்டில் இருக்கின்றது என்பது குறித்து நாட்டு மக்களுக்கு சிறந்த தெளிவு இருக்கின்றது.

ஆனால், ஒரு ஊடகம் இதனை திரிபுபடுத்தி செய்தி வெளியிட்டுள்ளது. இதனால், எமது நிலைப்பாட்டை மீண்டும் தெளிவுபடுத்துகின்றோம். இனப்பிரச்சினை தொடர்பாக மக்கள் விடுதலை முன்னணியின் நிலைப்பாடு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் "நாட்டுக்கு முதலிடம்" என்ற வேலைத் திட்டத்தின் கொள்கையில் தெளிவாகக் குறிப்பிடப் பட்டுள்ளது.

பேச்சுவார்த்தைகள் எந்தவித நிபந்தனைகளுக்கும் உட்படாமல் புலிகளுடன் மேற்கொள்ளப்பட வேண்டும். குறிப்பாக, புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனைகள் பேச்சுவார்த்தைக்கு எடுக்கப்படக்கூடாது. இலங்கையின் இறைமை, ஐக்கியம், தேசியம், ஒருமைப்பாடு, மனித உரிமைகள், சனநாயக உரிமைகள் போன்றன மதிக்கப்படுகின்ற விதத்தில் இனப்பிரச்சினைக்கான தீர்வு அமைய வேண்டும்.

பேச்சுவார்த்தையின் இறுதியில் எட்டப்படுகின்ற இறுதித் தீர்வு உள்ளடக்கப்பட்ட புதிய யாப் பிற்கு நாட்டின் மக்கள் ஆணை வழங்கினால் நாம் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கமாட்டோம். மக்களின் தீர்மானம் என்னவோ அதற்கு மக்கள் விடுதலை முன்னணி தலைவணங்கும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## புகையிரத சேவை ஊழியர்கள் போராட்டம் தற்காலிகமாக நிறுத்தம்

(கொழும்பு)

புகையிரத சேவை ஊழியர்கள் நேற்று மேற்கொள்ளவிருந்த வேலை நிறுத்தப் போராட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது.

சிறிலங்கா போக்குவரத்து அமைச்சர் பீலிக்ஸ் பெரேராவின் விசேட வேண்டுகோளிற்கிணங்கியே இந்த முடிவை எடுத்துள்ளதாக புகையிரத சேவை ஊழியர் சங்கத்தின் தலைவர் சம்பத் ராஜித தெரிவித்துள்ளார்.

இதேவேளை புகையிரத சேவை முகாமையாளர் பிரியால்டி சில்வாவுடன் நேற்று முன்தினம் இடம் பெற்ற பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சட்டவிரோத மரம் கடத்தல்; பொலிஸ் அதிகாரி கைது

(கொழும்பு)

கொழும்பின் புறநகர் களுத்துறையில் சட்டவிரோதமாக ஏற்றிச் செல்லப்பட்ட பெருந்தொகை மரங்களை பொலிசார் கைப்பற்றியுள்ளனர். பல இலட்சம் ரூபா பெறுமதியான இந்த மரங்களை கடத்திச் செல்லும் பணிகளில் களுத்துறைப் பகுதியில் உள்ள பொலிஸ் அதிகாரி ஒருவரும் அவருடைய குடும்பமுமே ஈடுபட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

பல நாட்களாக இவ்வாறாகப் பெருந்தொகை மரங்கள் சட்டவிரோதமாக தறிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது. (32)

## மேல் கொத்மலை, நுரைச்சோலை மின் திட்டங்களே நாட்டில் மின்சாரத் தட்டுப்பாட்டை நீக்கும்

### சிறிலங்கா மின்சார சபை அறிவிப்பு

மேல் கொத்மலை நீர்மின்சாரத்திட்டம் மற்றும் நுரைச்சோலை அனல்மின் மையம் ஆகியன ஆரம்பிக்கப்பட்டால் மாத்திரமே தற்போது நிலவும் மின்சார தட்டுப்பாட்டை நீக்க முடியும் என சிறிலங்கா மின்சார சபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கருத்துரைத்துள்ள மின்சார சபையின் முகாமையாளர் ரஞ்சித் பொன்கோ நாட்டில் இன்று எதிர்காலத்தில் ஏற்படப் போகும் மின்சார தட்டுப்பாட்டை நிவர்த்திக்க இந்த இரண்டு திட்டங்கள் ஆரம்பிக்கப்படுவது அவசியமாகும்.

நாட்டில் ஒவ்வொரு வருடமும் மின்சார தேவை 10 வீதத்தால் அதிகரித்து வருகின்றது. இதனை சமாளிக்க வேண்டுமானால், 150 மெகாவோட்ஸ் வருடாந்தம் அதிகரிக்கப்பட வேண்டும். எனவே மேல் கொத்மலை மற்றும் நுரைச்சோலை ஆகிய திட்டங்கள் ஆரம்பிக்கப் படுவது அவசியமாகும் என அவர் தெரிவித்தார்.

## நாடு எதிர்கொண்டுள்ள சவால்களை முறியடிக்க கூட்டணி அரசை ஜே.வி.பி பாதுகாக்கும்

### சோமவன்ச அமரசிங்க கூறுகின்றார்

(கொழும்பு)

தற்பொழுது நாடு எதிர்கொண்டுள்ள சவாலை இனங் கண்டுள்ளதுடன் அதனை முறியடிக்க தமது கூட் டணி அரசிற்கு ஆதரவு வழங்கவும் அதனைப்பாதுகாக்கவும் நடவடிக்கை எடுப்போம்எனஜே.வி.பி.யின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.


கடந்த 13ஆம் திகதி கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்ற தமது அமைப்பிலிருந்து கடந்த காலங்களில் பலியான உறுப்பினர்களின் 15 ஆம் ஆண்டின் நினைவு நாளில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கும் போது 1988ஆம் ஆண்டு காட்டு மிராண்டி ஐ.தே.கட்சி ஆட்சியாளர்கள் தனது தலைவரான விஜேயவீரவை கொலை செய்த தினம் இன்று எனக் கூறிய அவர் உயிர் தப்பிய ஏனையோர் வெளி நாடுகளில் மறைந்து வாழ்ந்ததாகவும் அதனால் இந்தத் தினத்தை இங்கு நினைவு கூர முடிகின்றது. எனவும் தெரிவித்தார்.

தற்போது தனது ஜே.வி.பி கட்சி நல்ல பலம் பெற்றிருப்பதாகவும் முன்னர் தமது கட்சியை தீவிரவாதக்கட்சியாக ஊடகங்கள் தெரிவித்ததாகவும் குறிப்பிட்டார்.

யார் எதைச் சொன்னாலும் விஜேவீர உருவாக்கிய எமது கட்சி நன்கு பலம்பெற்றுள்ளதாக இருப்பதாகவும் கூட்டணி அரசில் பலம் மிக்க ஒரு அங்கமாக விளங்குவதாகவும் நாடு எதிர்கொள்ளும் எந்தவொரு சவாலுக்கும் முகம் கொடுக்கத் தயாராக இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதன் போது உரையாற்றிய ரில்வின் சில்வா ஐ.தே.க. விஜேவீரவை மட்டும் பலி எடுக்கவில்லை. பெயர் குறிப் பிட முடியாத பலர் இருக்கின்றார்கள் என்று கூறியுள்ள துடன் 1983ஆம் ஆண்டு பறித்தெடுத்த ஆட்சியை நாம் 1994 இல் மீட்டதாகவும் அதற்காகப் பல கஷ்ரங் களை அனுபவித்ததாகவும் தெரிவித்தார். எமக்கு முக்கியமாகத் தேவைப்படுவது அரச மைக்க ஆதரவு வழங்குவதை விட நாட்டைப் பாது காப்பதே என்று அவர் கூறியுள்ளார்.

## கொம்பன் யானையின் தாக்குதலால் அலியன் யானை மரணம்



(கொழும்பு)

அநுராதபுரம் நாச்சதுவகுளம் என்ற இடத்தில் வேறு பிரதேசத்திலிருந்து வந்த தனியான யானை ஒன்று அப்பகுதி யானைக் கூட்டத்தில் இருந்த கொம்பன் யானை ஒன்றினால் தாக்கப்பட்டுப் பலியாகியுள்ளது.

கடந்த 13ஆம் திகதி நடைபெற்ற சம்பவத்தில் கொல்லப்பட்ட யானைக்கும், கொம்பன்யானைக்கும் இடையில் கடும் போர் மூண்டதாகவும் பலியான யானை கீழே விழுந்ததும் கொம்பன் யானை தனது தந்தங்களினால் பல தடவை குத்திக்காயப் படுத்தியதாகவும் அவ்வூர் வாசிகள் தெரிவித்துள்ளனர். மேற்படி யானையின் உடலில் 33 குத்துக்காயங்கள் காணப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

## -அரசாங்க வைத்தியசாலையில் பணிபுரியும்- இரசாயன ஆய்வுகூட ஊழியர்கள் நேற்று முதல் வேலை நிறுத்தத்தில் குதிப்பு!

(கொழும்பு)

நாடு முழுவதிலுமுள்ள வைத்தியசாலைகளில் இரசாயன ஆய்வுகூட ஊழியர்கள் நேற்றுக் காலை 8.00 மணி முதல் வேலை நிறுத்தத்தை ஆரம்பித்துள்ளனர்.

சுகாதார அமைச்சினால் அண்மையில் வெளியிடப்பட்ட சுற்று நிருபத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் பொருட்டே இந்த வேலை நிறுத்தம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இரசாயன ஆய்வுகூட ஊழியர் சங்கத் தலைவர் கூறினார்.

மகரகம புற்று நோய் வைத்தியசாலை, நாரஹென்பிட்டி இரத்த வங்கி ஆகியவற்றின் ஊழியர்கள் வழமையான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக சங்கத் தலைவர் சித்திர குமார தெரிவித்தார்.

இது தொடர்பாக கொழும்பு தேசிய வைத்தியசாலைப் பணிப்பாளர் கூறுகையில், வைத்திய ஆய்வுகூட ஊழியர்கள் கடமைக்கு சமுகமளிக்கவில்லையென்றும் எனினும், நோயாளிகள் மீதான உடற்கூற்று உள்ளிட்ட ஏனைய பரிசோதனைகளை தனியார் வைத்தியசாலைகளில் நடத்துமாறு சுகாதார அமைச்சரிடமிருந்து ஆலோசனை கிடைத்துள்ளதாகவும் இதற்கான செலவீனத்தைச் சுகாதார அமைச்சு ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஈராக்கில் கடத்தப்பட்ட இலங்கையரை விடுவிக்குமாறு பிரதமர் மீண்டும் கோரிக்கை

(கொழும்பு)

ஈராக் தீவிரவாதிகளினால் பணயம் வைக்கப்பட்டுள்ள இலங்கையரான தினேஸ் ராஜரட்ணத்தை விடுவிக்குமாறு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மீண்டும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கெய்ரோவில் பலஸ்தீன சனாதிபதி யசீர் அரபாத்தின் மரணச்சடங்குகளில் கலந்து கொள்ள சென்றவேளையே இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.கடத்தப்பட்ட ராஜரட்ணம் எங்கு வைக்கப்பட்டுள்ளாரென்றோ அவருக்கு என்ன நேர்ந்ததென்றோ இன்னமும் தெரியவில்லை. அவரை விடுவிப்பதற்கு சிறிலங்கா அரசாங்கம் ராஜதந்திர முயற்சிகள் மூலமாகவும் வேறு வழிகளிலும் பல நடவடிக்கைகளை எடுத்து வருகின்றதாகவும், பிரதமர் மேலும் தெரிவித்தார்.

# பா.ஜ.க. முன்னாள் பொதுச்செயலர் உமாபாரதி ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தில் சேருவார்?



**பாரதிய ஜனதாக் கட்சியின் நிர்வாகிகள் கூட்டத்தில் அத்வானியுடன் முரண்பட்டுக்கொண்ட பா.ஜ.கட்சியின் முன்னாள் பொதுச்செயலாளர் உமாபாரதி இன்று ஆர்.எஸ்.எஸ். நடத்தும் 5நாள் முகாமில் பங்கேற்கிறார். இதனால் அவர் அந்த இயக்கத்தில் சேருவாரா என்ற கேள்வி இந்திய அரசியல் களத்தில் பலமாக எழுந்துள்ளது.**

பா.ஜ.புதிய நிர்வாகிகள் கூட்டத்தில் அத்வானியுடன் மத்திய பிரதேச முன்னாள் முதல்வரும் பா.ஜ.பொதுச்செயலாளருமான உமாபாரதி மோதினார்.

பிரமோத்மகாஜன் உட்பட சக தலைவர்கள் தன்னை விமர்சிப்பதாகவும், அதைக்கட்சி மேலிடம் தட்டிக்கேட்கவில்லை என்றும் குற்றம் சாட்டிய உமாபாரதி அத்வானி பேசிக்கொண்டு இருந்தபோதே கூட்டத்தைவிட்டு வெளியேறினார்.

அதைத் தொடர்ந்து பா.ஜ.வின் அடிப்படை உறுப்பினர் பதவி மற்றும் பொதுச்செயலாளர் பதவி உட்படஅனைத்துப் பதவிகளில் இருந்தும் உமாபாரதியை 6ஆண்டு காலத்திற்கு இடைநிறுத்த அத் வானி நடவடிக்கை எடுத்தார்.

பா.ஜ.வில் தீப்பொறி தலைவர் என்று வர்ணிக்கப்பட்ட உமாபாரதி இந்து மதத்தில் தீவிரம் கொண்டவர். அதனால் அவர் விசுவ இந்து பரிசத், ஆர்.எஸ்.எஸ், பஜ்ரங்தளம் போன்றசங்பரிவார் அமைப்புக்கள் ஏதாவது ஒன்றில் சேருவார் என்று கூறப்பட்டது.

பா.ஜ.வில் இருந்து இடைநிறுத்தப்பட்டதும் அவர் நேராகச் சென்று ஆர்.எஸ்.எஸ்.தலைவர் மோகன்தாஸ் தேவியைச் சந்தித்து ஒருமணிநேரம் ஆலோசனை நடத்தியது குறிப்பிடத்தக்கது.

அதைத்தொடர்ந்து எங்கள் இயக்கத்தில் உமாபாரதி சேருவதாக இருந்தால் அவரை வரவேற்போம் என்று விசுவ இந்து பரிசத் துணைத்தலைவர் கிரி ராஜ்கிஷோர் அறிவித்தார்.

இந்த நிலையில் ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தின் 5 நாள் முகாம் வந்தியவாசினி புண்ணியதளம் அருகில் உள்ள தியோரா பாபா ஆச்சிரமத்தில் இன்று தொடங்குகிறது. இந்த 5நாள் முகாமில் உமாபாரதி கலந்துகொள்கிறார் என்று ஆர்.எஸ்.எஸ். வட்டாரங்கள் தெரிவித்தன.

விந்தியவாசினி தளத்திற்கும் உமாபாரதி யாத்திரை செல்வதாகவும், மௌன உண்ணாவிரதம் மேற்கொள்ளவிருப்பதாகவும் அந்த வட்டாரங்கள் கூறின.

ஆர்.எஸ்.எஸ்.முகாமில் உமாபாரதி கலந்துகொள்வது அந்த இயக்கத்தில் சேருவதற்கான முதற்படி என்று கூறப்படுகின்றது.

# இந்தியாவுக்கான பிரி.தூதுவர் நாகலாந்துக்குச் சுற்றுப் பயணம்

(புதுடில்லி)

இந்தியாவுக்கான பிரிட்டன் தூதுவர் சர்மிக்கேல் ஆர்தர் மூன்று நாள் சுற்றுப்பயணமாக நாகலாந்து சென்றுள்ளார். அவருடன் அவரது மனைவி, துணை தூதுவர் ஆண்ட்ரூ ஹால் உட்பட சிலர் சென்றுள்ளனர். நாகலாந்து முதல்வர் நிப்யூரியோவை தூதுவர் ஆர்தர் சந்தித்துப் பேசினார். இருவரும் இருநாடுகளுக்கிடையேயான பொருளாதார உறவு மற்றும் வளர்ச்சி குறித்து விவாதித்தனர். இதன் பின்னர் சுற்றுலா கிராமமான தொபிமாவுக்கு ஆர்தர் சென்றுள்ளார்.

# வெள்ள நிவாரணமாக 400 கோடி கேட்கும் ஜெயலலிதா

(சென்னை)

தமிழ் நாட்டில் வெள்ள நிவாரணம் மற்றும் மீட்புப் பணிகளுக்காக தேசிய அவசர நிதியத்திலிருந்து நானூறு கோடி ரூபா உதவுத் தொகை வழங்குமாறு தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா மத்திய அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த பல நாட்களாக தமிழகம் கேரளா, ஆந்திரா மாநிலங்களில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது.

# தூத்துக்குடியில் ரயில் மறியலில் ஈடுபட்ட கம்யூனிஸ்ட் கட்சிகளைச் சேர்ந்த 175 பேர் கைது

(சென்னை)

தூத்துக்குடியில் ரயில் மறியலில் ஈடுபட்ட கம்யூ- கட்சிகளைச் சேர்ந்த 175 பேர் கைதுசெய்யப்பட்டனர்.பெற்றோல், டீசல் மற்றும் விலையுயர்வைக் கண்டித்து தூத்துக்குடி மாவட்டத்தில் மார்க்கிஸ்ட்கம்யூனிஸ்ட் மற்றும் இந்திய கம்யூ- சார்பில் நேற்று முன்தினம் ரயில் மறியல் போராட்டம் நடந்தது.

தூத்துக்குடியில் இரண்டாவது ரயில் கடவை அருகே கம்யூ- கட்சித் தொண்டர்கள் குவிந்தனர். மைசூர்- தூத்துக்குடி எக்ஸ்பிறஸ் ரயில் வந்தபோது கம்யூ, கட்சியினர் கண்டனக் கோஷம் எழுப்பியவாறு ரயில்வே கடவையை நோக்கி வந்தனர். அவர்களைப் பொலிசார் ரயில்வேக் கடவையில் தடுத்து நிறுத்தினர். போராட்டக் குழுவினர் பொலிசாரின் தடுப்பை மீறி உள்ளே நுழைந்தனர். ரயில் தண்டவாளத்தில் சிறிது நேரம் அமர்ந்து கோஷம் போட்டனர். பின்னர் ரயிலை நோக்கி ஓடினர். ரயில் நின்றதும் கம்யூ- கட்சியினர் ரயில் இஞ்சின் மீது ஏறினர். பின்னர் மறியலில் ஈடுபட்ட கம்யூ- கட்சிகளையும் சேர்ந்த 10 பெண்கள் உட்பட 175 பேரைப் பொலிசார் கைது செய்தனர்.

# "தேசிய வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டம்" இந்தியப் பிரதமரால் ஆரம்பித்து வைப்பு

(புதுடில்லி)

கிராம தொழிலாளர்கள் இடம்பெயர்ந்து செல்லாதபடி அவர்களுக்கு வேலை வழங்கும் தேசிய வேலை வாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தை பிரதமர் மன்மோகன்சிங் ஆரம்பித்துள்ளார்.

முதற் கட்டமாக இந்தத் திட்டம் வேலைக்கு உணவுத் திட்டம் என்ற பெயரில் இந்தியா முழுவதும் 150 மாவட்டங்களில் அமுற்படுத்தப்படுகிறது. பிறகு படிப்படியாக இந்தியா முழு வதற்கும் விரிவுபடுத்தப்படும்.

இந்தத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு குடும்பத்திலும் தகுதியான ஒருவருக்கு ஆண்டுக்கு 100 நாட்கள் நியாயமான குறைந்த பட்ச கூலியுடன் வேலை வழங்கப்படும். வேலை வழங்க முடியாவிட்டால் அதற்கான கூலி கொடுக்கப்படும். இந் தத் திட்டத்துக்கு ஆண்டுக்கு ரூபா 6000 கோடி செலவிடப்படும்.

இந்த வேலைக்கு உணவு திட்டம் ஆந்திர மாநிலம் ரெங்காரெட்டி மாவட்டத்தில் உள்ள அலூர் கிராமத்தில் நேரு பிறந்த நாளான நேற்று முன்தினம் தொடங்கி வைக்கப்பட்டது. ஆந்திராவில் விவசாயிகள் வேலை வாய்ப்பு இல்லாமல் அதிக எண்ணிக்கையில் தற்கொலை செய்து கொண்டது ரெங்காரெட்டி மாவட்டத்தில்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

வேலைக்கு உணவுத் திட்டத்தைத் தொடங்கி வைப்பதற்காக பிரதமர் மன்மோகன்சிங் டில்லியில் இருந்து தனி விமானத்தில் ஹைதராபாத் சென்றார்.

அதன் பிறகு பிரதமர் அங்கிருந்து உலங்குவானூர்தியில் அலூர் கிராமத்துக்கு அழைத்து செல்லப் பட்டார். அங்கு நடந்த விழாவில் வேலைக்கு உணவுத் திட்டத்தைத் தொடக்கி வைத்தார்.

விழா முடிந்த பிறகு அங்கு திரண்டிருந்த குழந்தைத் தொழிலாளர்களை அழைத்து பிரதமர் பேசினார். குழந்தைகள் தினமான நேரு பிறந்த தினத்தன்று குழந்தைகளைச் சந்திப்பது மகிழ்ச்சி அளிக்கிறது என்று கூறிய பிரதமர் கொத்தடிமை குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

ஆந்திராவில் வேலைக்கு உணவு திட்டம் 8 மாவட்டங்களில் அமுல்படுத்தப்படுகிறது. அதற்கு ரூ. 127 கோடிஒதுக்கப்பட்டுள்ளது.

### டாக்டர் அகர்வாள் படுகொலை

# இந்.மருத்துவக்கழகத்தின் வேலை நிறுத்தம் நேற்று மூன்றாவது நாளாக தொடர்ந்தது

(புதுடில்லி)

இந்தியாவில் பிரபல அறுவைச் சிகிச்சை நிபுணர் அகர்வாள் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து இந்திய மருத்துவக் கழகம் அழைப்பு விடுத்திருந்த காலவரையறையற்ற வேலை நிறுத்தம் நேற்று மூன்றாவது நாளாக நடைபெற்றது.

கொலையாளிகள் கைது செய்யப்படும் வரையில் மற்றும் கடத்தப்பட்ட டாக்டர் நரேந்திர பிரசாத் விடுதலை செய்யப்படும் வரையிலும் வேலை நிறுத்தத்தைத் தொடரப்போவதாக இந்திய மருத்துவக்கழகம் அறிவித்துள்ளது.

இதனால் சுகாதார சேவைகள் முடங்கியுள்ளன.

# வைகோ கோரிக்கை

(புதுடில்லி)

காஞ்சி சங்கராச்சாரியார் கைதானது குறித்து விபர அறிக்கையை தமிழக அரசு வெளியிட வேண்டும் என்று மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் வைகோ கோரியுள்ளார்.

# தனித்தெலுங்கானா மாநிலம் அமைப்பது குறித்து பொதுக் கருத்தை உருவாக்க மத்திய அரசு முயற்சிக்கும்

## -பிரதமர் மன்மோகன் சிங் அறிவிப்பு



(புதுடில்லி)

தனித்தெலுங்கானா மாநிலம் அமைப்பது குறித்து பொதுக் கருத்தை உருவாக்க மத்தியரசு முயற்சிக்கும் என்று பிரதமர் மன்மோகன்சிங் தெரிவித்துள்ளார்.

ஹைதராபாத்தில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில், இந்திய மற்றும் பாகிஸ்தான் பிரச்சினைகளுக்கு இரு தரப்பும் ஏற்றுக் கொள்ளக் கூடிய நிரந்தரத் தீர்வு காண முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தாம் விரை வில் காஷ்மீருக்கு விஜயம் செய்ய வுள்ளதாகவும் இந்த விஜயம் அந்த முயற்சிக்கு உறுதுணையாக அமையும் என்றும் பிரதமர் கூறி னார்.

மேலும் சோதனை அடிப்படையிலேயே காஷ்மீர் எல்லைப்பகுதியிலிருந்து படைகள் திரும்பப் பெறப்பட்டுள்ளதாகவும் கூறிய அவர், காஷ்மீர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதில் மூன்றாம் தரப்பு தலையீட்டை அனுமதிக்க முடியா தென கூறிய பிரதமர் மன்மோகன் சிங் கடந்த முறை பாராளுமன்ற நடவடிக்ககைகள் முடக்கப்பட்ட தைக் குறிப்பிட்டு வரும் கூட்டத் தொடரில் எதிர்க்கட்சிகள் அவையை பிரச்சினையில்லாமல் நடத்த ஒத்துழைக்கும் என்று தான் நம்புவதாகவும் குறிப்பிட்டார்.

மேலும் நக்சலைட்டுக்களுடனான ஆந்திர அரசின் பேச்சுவார்த்தையை பிரதமர் பாராட்டினார்.

சங்கராச்சாரியார் கைது செய்யப்பட்டதில் மத்திய அரசுக்கு எந்தப் பங்கும் இல்லை காஞ்சி சங்கராச் சாரியார் ஜெயேந்திரர் கோயில் நிர்வாகி சங்கரராமன் கொலை வழக்கையொட்டி ஆந்திர மாநிலம் மெகபூவ் நகரில் நள்ளிரவு தமிழகப் பொலிசாரால் சாமியார் கைது செய்யப்பட்டார்.

இதற்குப் பா.ஜ.க.மற்றும் விசுவ ஹிந்து பரிசத், ஆர்.எஸ்.எஸ், பஜ்ரங்தளம் போன்ற சங்பரிவார் அமைப்புக்கள் மத்திய அரசை குற்றம் சாட்டி அறிக்கை விட்டன. இந்தக் குற்றச்சாட்டு பற்றி நேற்று முன்தினம் ஆந்திரா வந்த பிரதமர் மன்மோகன்சிங்கிடம் நிருபர்கள் கேட்டனர்.

அதற்குப்பதில் அளித்தபோதே மன்மோகன்சிங் இந்த மறுப்பைத் தெரிவித்துள்ளார். காஞ்சி சங்கராச்சாரியார் ஜெயேந்திரர் கைது செய்யப்பட்டதில் மத்தியரசின் பங்கு எதுவும் இல்லை. அந்த விவகாரத்தில் மத்திய அரசுக்கு எந்த அக்கறையும் கிடையாது. சொல்லப்போனால் அந்தப்பிரச்சினை பற்றி மத்திய அரசு கவலைப்படவும் இல்லை என்றும் பிரதமர் மன்மோகன்சிங் கூறினார்.



காயல் பட்டினத்தில் பெய்த கனமழையால் பஸ் நிலையத்திற்குள் குளம் போல் தேங்கிக் கிடக்கும் நீரில் 2 யானைகளைப்பாகன்கள் குளிப்பாட்டிக் கொண்டிருப்பதைப் படத்தில் காணலாம்.

# ஜெயந்திரசரஸ்வதி சுவாமியின் சீடர்வீட்டில் பொலிசார் சோதனை

(சென்னை)

காஞ்சி சங்கர மடத்தின் பீடாதிபதி ஜெயந்திரசரஸ்வதி சுவாமியின் முக்கிய சீடரான பசுபதியின்வீட்டில் பொலிசார் சோதனை நடத்தியுள்ளனர்.

இன் நிலையில் ஜெயந்திரர் மற்றும் இளையசங்கராச்சாரியாரின் அறையில் சோதனையிட்டபோது அங்கிருந்து முக்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் இவற்றில் கோயில் மேலாளர் கொலை தொடர்பாக முக்கிய சில ஆதாரங்கள் கிடைத்ததாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கொலை வழக்கில் சங்கராச்சாரியார் ஜெயந்திர சுவாமிகள் கைது செய்யப்பட்டமை பற்றி சி.பி.ஐ. விசாரணைநடத்த வேண்டுமென்று இளைய சங்கராச்சாரியார் கேட்டுக்கொண்டுள்ளார்.

# 2005 அவுஸ்.செல்லும் மே.தீவு வீரர்களுக்கு பயிற்சி முகாமில் கலந்துகொள்ள அழைப்பு



—கிரிக்கெட்சபை விடுத்தது

எதிர்வரும் 2005 சனவரியில் அவுஸ்திரேலியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவிருக்கும் மேற்கிந்தியத்தீவுக் கிரிக்கெட் வீரர்கள் 25பேரையும் பயிற்சி முகாம் ஒன்றில் கலந்துகொள்ளவருமாறு மேற்கிந்தியத்தீவு கிரிக்கெட்சபை அழைப்பு விடுத்துள்ளது. ஆயினும் எந்த ஒப்பந்தத்திலும் கையெழுத்து வைக்கவேண்டியதில்லை என்றும் தெரிவித்துள்ளது.கிரிக்கெட் சபையின் தலைவர் தினனாத் ராம்நரின் இந்த பயிற்சி முகாம் மூலம் வீரர்களின் திறன் மேம்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இப்பயிற்சி மூலம் வீரர்களுக்கு எதுவித அழுத்தம் கொடுக்கவோ வெள்ளைத்தாளில் கையெழுத்து வாங்கவோ எந்தவித திட்டமும் கிடையாது என்று அவர் தொடர்ந்து பேசும்போது தெரிவித்துள்ளார்.

மேற்கிந்தியத்தீவுகள் அணி, அவுஸ்திரேலியா, பாகிஸ்தான் அணிகள் பங்குகொள்ளும் முக்கோணத்தொடர் ஒன்றில் பங்கேற்கவுள்ளது.

கடந்த இருவருடங்களாக வீரர்கள் கிரிக்கெட்சபையுடன் முரண்பாடு கொண்டிருந்தனர். இதற்குக் காரணம் கடந்த 2002ஆம் ஆண்டு சிறிலங்காவில் நடைபெற்ற மினி உலகக் கிண்ணப் போட்டிகளிலும், 2003ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவில் நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டிகளிலும் பங்கேற்றதற்கான கொடுப்பனவு வழங்கப்படாதிருந்தமையும், விளம்பரக் கொடுப்பனவுகள் வழங்கப்படாமையும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# பந்துவீச்சாளர்கள் தொடர்பில் ஐ.சி.சி யின் புதிய பிரேரணைகள் மகிழ்ச்சிக்குரியது



-புரூஸ்டாட்லி

கிரிக்கெட் போட்டியின் போது பந்து வீச்சாளர்கள் தமது முழங்கையை எத்தனை பாகை அளவில் வளைக்கலாம் எனும் சட்டத்தில் மாற்றங்களைக் கொண்டுவரும் வகையில் சர்வதேச கிரிக்கெட் சம்மேளனத்திற்கு செய்யப்பட்டுள்ள பிரேரணைகள் தொடர்பாகத் தாம் பெரிதும் மகிழ்ச்சியடைவதாக முன்னாள் டெஸ்ட் கிரிக்கெட் வீரர் புரூஸ் டாட்லி தெரிவித்துள்ளார்.

உலகில் உள்ள பந்துவீச்சாளர்கள் தமது முழங்கையைக் குறிப்பிட்டபாகை அளவில் வளைத்துப் பந்து வீசுவார்கள்.

அவுஸ்திரேலியாவின் கிளென் மெக்ராத், நியூசிலாந்தின் ரிச்சட்ஹட்லி ஆகியோர் கூட இவ்வாறுதான் பந்து வீசுகின்றனர்.

இவர்களுடன் ஒப்பிடும்போது சிறிலங்கா சுழற்பந்து வீச்சாளர் முரளிதரன் சம்பந்தமாக சர்வதேச கிரிக்கெட் சம்மேளன அதிகாரிகளிடையே ஏற்பட்ட விதம் தொடர்பாக தாம் பெ[illegible]ும் கவலை அடைவதாக புரூஸ்டாட்லி தெரிவித்துள்ளார்.

இவர் சிறில[illegible]ங்கா அணியின் பயிற்சியாளராக இருந்[illegible]போது முத்தையா முரளிதரனுக்கு தூ[illegible] முறையில் பந்து வீசுவதற்கு ஊக்குவிப்பையும் வழங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் பந்து வீச்சானது எவ்வகையிலும் சட்டவிரோதமானது அல்ல என்றும் புரூஸ்டாட்லி தெரிவித்துள்ளார். எனினும் இந்தப் பந்துவீச்சு சம்பந்தமாக சில திருத்தங்களைமேற்கொள்வதைத் தான் வரவேற்பதாகவும் இது பந்துவீச்சாளர்களின் திறமையை மேலும் வளர்த்துக்கொள்ள வழி வகுக்கும் எனவும் டாட்லி சுட்டிக்காட்டினார்.




அடுத்த உலகக் கோப்பை கால்பந்துப் போட்டி ஜேர்மனியில் 2006 ஆம் ஆண்டு நடைபெற உள்ளது. இதை முன்னிட்டு போட்டியில் அதிகாரபூர்வ சின்னமான சிங்கத்தை ('கோலியோ-6') பத்திரிகையாளர்களிடம் அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சி ஜேர்மனியின் லீப்ஜிக்கில் சனிக்கிழமை நடைபெற்றது. அப்போது சின்னத்துடன் கால்பந்து ஜாம்பவான்கள் பிரேசிலைச் சேர்ந்த பீலே (இடது), ஜேர்மனியின் பிரான்ஸ் பெக்கன்பாவர். 1958, 1962 மற்றும் 1970 ஆம் ஆண்டுகளில் பிரேசில் உலகக் கோப்பையை வெல்வதற்கு முக்கியமானவர் பீலே. 2006 உலகக் கோப்பை போட்டியின் தலைவராக உள்ளார் பெக்கன்பாவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்திய கிரிக்கெட் அணித் தலைவராக கங்குலியே நீடிக்க வேண்டும்

—அக்ரம்

இந்திய கிரிக்கெட் அணித் தலைவராக சௌரவ் கங்குலியே நீடிக்க வேண்டும் என்று பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் வாசிம் அக்ரம் கருத்துத்தெரிவித்தார். கங்குலியை நீக்கி விட்டு வேறு யாராவது தலைவராக வந்தால்தான் இந்திய அணியின் திறமை மேம்படும் என்று அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் மார்க்வோ கூறியிருந்தார். அதை மறுக்கும் விதத்தில் இருக்கிறது வாசிம் அக்ரமின் கருத்து. பெங்களூரில் வாசிம் அக்ரம் அளித்த பேட்டிவருமாறு. இந்திய கிரிக்கெட் அணி இப்போது சக்தி குறைந்தது போலத் தோன்றுகிறது. இது உலகிலுள்ள எல்லா அணிகளுக்குமே ஏற்படுவதுதான். அதற்காக அணியை ஒரேயடியாக மாற்றிவிட முயல்வது நல்லதல்ல. இதனால் நிலமை மேலும் மோசமாகப் போய்விடும். சௌரவ் கங்குலிக்கு இப்போது 31 அல்லது 32 வயதாக இருக்கும். இன்னமும் குறைவாகக் கூட இருக்கும் என்று நம்புகின்றேன். இன்னும் சில ஆண்டுகளுக்கு அவர் முதல்தர கிரிக்கெட் போட்டிகளில் ஆட முடியும். நல்ல அனுபவமும் திறமையும் உள்ளவரை இப்போது விலக்கினால் அதனால் நஷ்டம் அணிக்குத்தானே தவிர அவருக்கல்ல. அவரை மட்டு மல்ல, அணியின் பெரும்பாலான வீரர்களையும் மாற்றக்கூடாது என்றே நினைக்கின்றேன். இப்போது அணியில் இருப்பவர்கள் எல்லாம் திறமையும் அனுபவமும் உள்ளவர்கள். அத்துடன் ஒரே அணியாகப் பலகாலம் விளையாடியவர்கள். அவர்களுக்குள் நல்ல புரிந்துணர்வு இருக்கும். நல்ல தோழமையும் ஏற்பட்டிருக்கும். இந் நிலையில் அவர்களின் கூட்டைக் கலைப்பது சரியல்ல எனவும் தெரிவித்தார்.

# இறைவன் தந்த பரிசு



—சல்மான் பட்

பவளவிழாப் போட்டியில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய ஒரு வீரர் என்றால், பாகிஸ்தான் இளம் துவக்க ஆட்டக்காரர் சல்மான்பட். ஒரு நாள் போட்டிகளில் தனது முதல் சதத்தை இங்கு பூர்த்தி செய்தார். அணிக்கு வெற்றியும் தேடித்தந்தார். தசைப் பிடிப்புக் காரணமாக அவதிப்பட்டவர்,கடும் வலியையும் பொறுத்துக் கொண்டு சதம் அடித்திருக்கிறார் என்றால் சாதாரண விடயமல்ல.

"எனது சீனிய வீரர்கள், அணித்தலைவர் இன்சமாம் ஆகியோர் சொன்னது போல விளையாடினேன் அவ்வளவு தான். ரம்ழான் நோன்பு இருந்ததால் களைப்புக்காரணமாக தசைப் பிடிப்பு ஏற்பட்டுவிட்டது. வேறொன்றும் பிரச்சினை இல்லை. இது அருமையான சதம். ரம்ழான் நேரத்தில் அல்லா எனக்குக் கொடுத்த மிகச்சிறந்த பரிசு இது," என்றார் சல்மான்பட்.

# வை.எம்.சி.ஏ. நடத்திய வருடாந்த கரம் போட்டியில் வெற்றி பெற்றோர்

யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏ வருடாந்தம் நடத்திவரும் உள்ளக விளையாட்டுப் போட்டி யில் ஒரு பிரிவாக வை.எம்.சி.ஏ மண்டபத்தில் கரம் சுற்றுப் போட்டி இடம் பெற்றது.

ஆண்கள் பெண்களுக்கு இடையே திறந்த போட்டியாகவும், வயது ரீதியாக மட்டுப்படுத்திய போட்டியாகவும், இடம்பெற்ற போட்டிகளில் வெற்றியீட்டியோர் விபரம் வருமாறு:- 10வயது ஆண்கள் இறுதிப் போட்டியில் எம். ஆகாஷன் எம்.அப்சாகர் ஆகியோர்விளையாடியதில் எம்.ஆகாஷன்இரு சுற்றுக்களிலும் வெற்றி பெற்று சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டார்.

12 வயதுப் பெண்கள் தனி இறுதிப் போட்டியில் செல்வி எஸ்.சரோமின் செல்வி.எஸ் துளசிகா விளையாடியதில் செல்வி எஸ். சரோமின் இரு சுற்றுக்களிலும் வெற்றி பெற்று சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டார்.

12 வயதுப் பிரிவு இரட்டையர் இறுதி ஆட்டத்தில் செல்வி எஸ்.துவாரகா செல்வி ரி.மயூரானந்தி அணியும் செல்வி. கே சரோமினி செல்வி. பி.துலிக்சி அணியினர்விளையாடியதில் செல்வி எஸ்துவாரகா அணியில் இரு சுற்றுக்களை யும் வெற்றி கொண்டு சம்பிய னாகத் தெரிவு செய்யப்பட்டனர்.45 வயதுக்கு மேற்பட்ட திறந்த இறுதிப் போட்டியில் எஸ்.சற்குணாமூர்த்தியும் எஸ்.ஏ. மாணிக்கராசாவும் விளையாடியதில் எஸ். சற்குணாமூர்த்தி இரு சுற்றுக்களையும் வென்று சம்பிய னாகத்தெரிவு செய்யப்பட்டனர். (41)

# கங்குலிக்கு தடை



குறிப்பிட்ட நேரத்தைக்காட்டிலும் இந்திய அணி கூடுதல் நேரம் எடுத்துக் கொண்டு பந்து வீசியதன் காரணமாக இந்திய அணித் தலைவர் கங்குலிக்கு 2 டெஸ்ட் போட்டியில் ஆடத்தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தத் தடை உடனடியாக அமுலுக்கு வருவதாக போட்டி நடுவர் லொய்ட் அறிவித்ததால் தென் ஆபிரிக்கா அணிக்கு எதிரான 2 டெஸ்ட் போட்டியிலும் கங்குலி ஆட முடியாத பரிதாபம் ஏற்பட்டுள்ளது.

50 ஓவரை ஒரு அணி 31/2 மணி நேரத்தில் வீச வேண்டும். ஆனால் குறிப்பிட்ட இலக்கை காட்டிலும் இந்திய அணி அதிகப்படியான நேரம் எடுத்துக்கொண்டதால்,கங்குலி மீதுநட வடிக்கை எடுக்கவேண்டியது தவிர்க்க முடியாத ஒன்றாகி விட்டது. என்று லொய்ட் தெரிவித்தார்.

# மாவீரர் வெற்றிக்கிண்ண கால்பந்து முள்ளியவளை வித்தியா அணி சம்பியன்

மாவீரர் வெற்றிக் கிண்ணத்துக்காக முல்லை மாவட்டரீதியில் நடைபெற்ற கால்பந்து இறுதிப் போட்டியில் முள்ளியவளை வித்தியா அணி சம்பியனானது.

புதுக்குடியிருப்பு மாலதி விளையாட்டு மைதானத்தில் நேற்று நடைபெற்ற இறுதிப்போட்டியில் புதுக்குடியிருப்பு சுப்பராங் அணியை எதிர்த்தாடிய வித்தியா அணி 3-2 என்ற கோல் எண்ணிக்கையில் வெற்றி பெற்றுச்சம்பியனானது.

முல்லை மாவட்டத்தைச் சேர்ந்த பதினொரு கால்பந்து அணிகள் கலந்து கொண்ட இச் சுற்றுப் போட்டி கடந்த மூன்று நாட்களாக மாலதி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வந்தது.

இறுதிப் போட்டியில் வெற்றி பெற்ற அணிக்கு வெற்றிக் கிண்ணமும், 7000 ரூபா பணப் பரிசும் வழங்கப்பட்டது. இரண்டாம் இடத்திற்கு 5000 ரூபா பணப்பரிசும் வெற்றிக் கேடயமும் வழங்கப்பட்டது. (20,08)

விளையாட்டு


# குத்துச்சண்டை ஹோலி பீல்ட் தோல்வி



அமெரிக்காவில் நியூயோர்க் நகரில் உள்ள மாடிசன் பேர் கார்டனில் உலக ஹெவி வெயிட் குத்துச் சண்டை சம்பியன் போட்டி நடந்தது. இதில் இவாண்டர் ஹோலி பீல்டும், லேரி டோனால்டும் மோதினர்கள். 12 சுற்றுக்கள் கொண்ட இந்தப் போட்டியில் டோனால்டுவின் குத்துகளை எதிர்கொள்ள முடியாமல் ஹோலி பீல்டு தோல்வி அடைந்தார். போட்டியில் பங்கேற்ற நடுவர்களில் 2 பேர் 119-109, 118-109 புள்ளிகளில் டோனால்டு வெற்றி பெற்றதாக அறிவித்தனர். 42 வயதான ஹோலி பீல்ட் 38 போட்டிகளில் விளையாடி 8 போட்டிகளில் தோல்வி அடைந்துள்ளார்.

# சம்பியன்ஸ் கோப்பை ஹொக்கி நெதர்லாந்து, ஜேர்மனி இறுதி மோதல்

மகளிருக்கான சம்பியன்ஸ் கோப்பை ஹொக்கிப் போட்டியின் இறுதிச் சுற்றுக்கு ஜேர்மனி, நெதர்லாந்து அணிகள் தகுதி பெற்றுள்ளனஅதே சமயம் போட்டியை நடத்தும் ஆர்ஜென்டினாவை எதிர்த்து நடப்புச் சம்பியன் அவுஸ்திரேலியா வெண்கலப்பதக்கத்துக்காக மோதுகிறது. நியூசிலாந்து, சீனா அணிகள் 5ஆவது இடத்துக்காக விளையாடுகின்றன. 6 நாடுகள் பங்கேற்றுள்ள இப் போட்டி ஆர்ஜென்டினா தலைநகர் புவனஸ் சயர்ஸின் வடக்கே 300 கி.மீ தொலைவில் அமைந்துள்ள ரொசாரியோவில் கடந்த சில தினங்களாக நடைபெற்று வருகின்றன. சனிக்கிழமை இரவுடன் லீக் ஆட் டங்கள் முடிவடைந்தன. லீக் புள்ளிப்பட்டியலில் ஜேர்மனியும், நெதர்லாந்தும் தலா 11 புள்ளிகளைச் சேர்த்து பட்டத்துக்கான மோதல் வாய்ப்பைப் பெற்றன. எதென்ஸில் கடந்த ஒகஸ்டில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியிலும் இவ்விரு அணிகளே பட்டத்துக்காக மோதின.



### சிந்தனைக்கு

தனது மனவுலக ஆசைகளிலிருந்தும் - அச்சங்களிலிருந்தும் தன்னை விடுதலை செய்து கொள்பவன்தான் உண்மையில் விடுதலை வீரன் என்ற தகைமையைப் பெறமுடியும்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 16-11-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

## அதிகாரத்தில் பங்கீடு..!

தற்போது நடைமுறையில் உள்ள தேர்தல் விகிதாசார பிரதிநிதித்துவ முறையானது அமைதியையும் பரஸ்பர வாழ்வையும் சீர்குலைப்பதாக அமைந்துள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அமராபியசிறிரத்நாயக்க கவலை வெளியிட்டுள்ளார். இதற்குப் பிராயச்சித்தமாகத் தேர்தல் முறையில் மாற்றம் கொண்டு வருவதைத் தான் வரவேற்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினர்அமராபியசிறிரத்நாயக்கவிடம் இருந்து இத்தகையதொரு கருத்து வெளிப்பட்டமை ஒன்றும் ஆச்சரியத்திற்குரியதல்ல. ஏனெனில் ஐ.தே.கட்சி உறுப்பினர்– அதாவது எதிர்கட்சி உறுப்பினர் என்பதற்காகவும் ஆளும் கட்சியின் முயற்சி என்பதால் அதற்கு அவர் எதிர்ப்புத் தெரிவிப்பார் என்று எதிர் பார்ப்பதற்கில்லை. ஏனெனில் விகிதாசாரத் தேர்தல் பிரதிநிதித்துவமானது மாற்றப்படுவது சிறுபான்மையினர் விரும்பாததொன்றே ஒழிய பெரும்பான்மைக் கட்சியினர் எவருக்கும் இது விரும்பத்தகாததல்ல.

ஏனெனில் கட்சி அதிகாரமானது காலத்திற்குக்காலம் வெவ்வேறு நபர்களிடம் மாறிச் செல்லினும் பெரும்பான்மை இனக் கட்சிகளின் கைகளிலேயே செல்ல முடியும். ஏனெனில் சிறுபான்மை இனத்தவா பாராளுமன்றத்தில் எவ்வேளையிலும் பெரும்பான்மை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு இல்லை. ஆகையினால் இம் முறை ஒருவரானால் மறு முறை ஒருவரென மாறி மாறிச் சிங்களப் பெரும்பான்மைக் கட்சி சார்ந்தவர்களே, ஆட்சி அதிகாரத்திற்கு வருதல் முடியும்.

அதாவது விகிதாசாரப் பிரதிநிதித்துவம் இருந்தால் என்ன? தொகுதி வாரிப் பிரதிநிதித்துவம் இருந்தால் என்ன? அன்றி இரண்டும் காலந்ததாக இருந்தால் என்ன? பெரும்பான்மை இனத்தினரே ஆட்சிக்கு வரவுள்ளனர். காலத்திற்கு காலம் ஆட்சி அதிகாரம் கைமாறுவதே தவிர்க்க முடியாததாகவுள்ளது.

ஆகையினால் இம் முறை எதிர்க்கட்சியாக இருப்பவர்கள் அடுத்த முறை வெற்றி பெறலாம். அன்றி அதற்கு அடுத்த முறை அதிகாரத்தைக் கைப்பற்றலாம். தொகுதிவாரிப் பிரதிநிதித்துவத்திலும், விகிதாசாரப் பிரதிநிதித்துவத்திலும் இத்தகைய நிலையே காணப்படினும் விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தில்உள்ள சிறப்பு என்ன வெனில் பெரும்பான்மைக் கட்சிகள் மாறிமாறிப் பெரும்பான்மையைப் பெறினும் ஆட்சியதிகாரத்தில் யார் இருப்பது என்பதைத் தீர்மானிக்கும் சக்தியைப் பல சமயங்களில் சிறுபான்மை இனக்கட்சிகள் பெற்று விடுகின்றன.

ஆனால் இத்தகையதொரு நிலையை சிங்களப் பெரும்பான்மை கட்சிகளுக்கு விருப்பத்திற்குரியதாக இல்லை. அதாவது சிறுபான்மை இனக்கட்சியில் தங்கியிருக்க அவை விரும்பவில்லை. இந் நிலையானது பௌத்த பீடங்களின் தலைமையில் இருந்து அரசியற் கட்சிகளின் தலைமைப் பீடங்கள் வரையில் பொதுவாகக் காணப்படும் ஒன்றாகவே உள்ளது.

அதாவது சிறுபான்மையினர் ஆட்சியாளரைத் தீர்மானிப்பதை இரு பெரும் சிங்களக் கட்சிகள் உட்பட அனைத்துச் சிங்களக் கட்சிகளும் விரும்பவில்லை. ஆனால் இதில் ஆச்சரியப் படுவதற்கு எதுவுமே இல்லை.ஏனெனில் சிறுபான்மையின மக்களுடன் குறைந்த மட்டத்தில் தானும், அதிகாரப் பரவலாக் கலைச் செய்யத் தயாராக இல்லாத சிங்களக் கட்சிகள் ஆட்சி அதிகாரத்தை சிறுபான்மையினர் தீர்மானிப்பதை ஏற்றுக் கொள்வார்கள் என எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

ஐ.தே.கட்சி பாராளுமன்ற உறுப்பினர் கூற விரும்புவது போன்று அமைதியையும், பரஸ்பர வாழ்வையும் இத்தேர்தல் முறை சீர்குலைப்பதாக உள்ளதென்பது ஒரு வகையில் பார்த்தால் சில உண்மைகள் இருப்பது போன்றே தோற்றமளிக்கும். அதாவது சிறுபான்மை இனக் கட்சிகள் மாறி மாறி ஆட்சிக்கு வரும் பெரும்பான்மைக் கட்சிகளுடன் பேரங்களில் ஈடுபடுவதும், அமைச்சுக்களைப் பெறுவதும் பெரும்பான்மை இனத்தவரிடையே அதிருப்தியைத் தோற்றுவிக்கக்கூடிய தொன்றுதான்.

ஆனால் ஐ.தே.கட்சி பா.உ கூறியிருப்பது போன்று இக் காரணிகளுக்காக விகிதாசார தேர்தல் பிரதிநிதித்துவ முறையை நீக்கக் கோருவதென்பது ஏற்புடைய வழிமுறையாகாது. ஏனெனில் சிங்கள ஆட்சியாளர்கள் எவருமே தமிழ் மக்களின் அமைதியானதும், பாதுகாப்பானதுமான வாழ்விற்கு என்றுமே ஒத்துழைத்ததாக இல்லை.

மாறாக தமிழ் மக்களின் உரிமைகளைப் பறித்தெடுத்து விடும் வகையிலும் அவர்கள் மீது அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விடும் வகையிலான சட்டங்களையும், அரசியல் யாப்பு விதிகளையும் கொண்டுவந்தமையே வரலாறு ஆகும். இந்த நிலையில் ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினரின் கவலையானது ஆடு நனைகின்றது என்று ஓநாய் அழுகின்றது என்பதாகவே இருக்கும்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விகிதாசார பிரதிநிதித்துவத்தை மாற்றுவதற்கு மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு சிங்களத் தரப்பில் இருந்து எதிர்ப் புக்கள் எவையும் கிளம்பும் என எதிர் பார்ப்பதற்கில்லை. ஆனால் சனாதிபதி முறை ஒழிப்பை ஐ.தே.கட்சி எதிர்ப்பதினால் அரசியல் யாப்பு மாற்றம் என்ற ரீதியில் அதனோடு இணைந்து தேர்தல விகிதா சார முறையை மாற்ற சனாதிபதி சந்திரிகா முயன்றால் விகிதாசார பிரதிநிதித்துவ முறை மாற்றப்படுவதில் சிக்கல்கள் உருவாகலாம். இதை விடுத்து சிறுபான்மையினரின் நலன்கள் பாதிக்கப்படும் என பெரும்பான்மை இனக் கட்சிகள் எவையும் விகிதாசாரத் தேர்தல் முறை ஒழிப்பில் முரண்பட்டு நிற்கப்போவதில்லை.

# சனாதிபதி முறையை நீக்க விரும்பவில்லை அதிகாரங்களைக் குறைக்க விரும்புகிறோம்

### ஐ.தே.க. தவிசாளர் கரு ஜெயசூரியா

நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி முறையை முற்று முழுதாக அகற்றுவதற்கு ஐ.தே.க.விரும்பவில்லையென கட்சியின் தவிசாளரும் முன்னாள் அமைச்சருமான கருஜெசூரிய தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற தேர்தல் சட்ட சீர்திருத்தங்கள் தொடர்பான தேசிய மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றியவேளை அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். உலக நாடுகளின் அனுபவங்கள் ஊடாக தேர்தல் சட்டங்களில் மாற்றங்களைக் கொண்டு வருவதன அவசியத்தை நாம் உணர்ந்திருக்கின்றோம். பல நாடுகளில் இவ்வாறான சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்ட பின்னர் வன்முறைகள் பெருமளவு குறைந்திருக்கின்றன. மக்கள் தங்கள் பிரதிநிதிகளை இலகுவாகத் தொடர்பு கொள்ளக்கூடிய நிலை தோன்றியுள்ளது.

இலங்கையைப் பொறுத்தவரை வன்முறையென்பது அரசியலின் ஒரு பகுதியாகிவிட்டது. அரசியல் பெருமளவிற்கு மாறியுள்ளது. அரசியல் என்பது சிலருக்கு தொழிலாக மாறியுள்ளது. நாட்டிற்காக, மக்களுக்காக அரசியல் என்ற நிலை மாறிவிட்டது. தேர்தல் சட்டங்களில் சீர்திருத்தங்களைக் கொண்டுவருவது மிகவும் சாத கமான விடயம்,நாங்கள் இதனை வரவேற்கிறோம். இதற்காகவே நாங்கள் ஆட்சியிலிருந்தபோது பாராளுமன்ற தெரிவுக் குழுவை அமைக்க முன்வந்தோம் .

தேசிய அடையாள அட்டையை கட்டாயமாக்குவதை நாங்கள் ஒரேயொரு காரணத்திற்காக வரவேற்கிறோம். சுதந்திரமான நீதியான தேர்தல் நடைபெற அது உதவும் என்பதால் மாத்திரமேஅதை வரவேற்கிறோம். ஏனைய நோக்கங்களுக்காக.தேசிய அடையாள அட்டையை அவசியமாக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டால் அதை நாங்கள் எதிர்ப்போம். அரசியல்வாதிகள். பொலிசார் மீது கடும் குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதை சமீப காலமாக காணமுடிகின்றது பொலிஸ் அதிகாரிகள் தங்களுடைய நடவடிக்கைகளுக்கு உதவ முன்வரவில்லை. என்றாலும் அவர்கள் பொலிஸ் திணைக்களத்தை குற்றம் சாட்டத் தொடங்கியுள்ளனர். நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி முறையை முற்று முழுதாக நீக்க நாங்கள் விரும்பவில்லை.

பாராளுமன்ற தெரிவுக்குழுவிலும் இதே கருத்தை முன்வைத்தோம், நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி முறையில் காணப்படும் சாதகமற்ற விடயங்களையே நாங்கள் நீக்க வேண்டும் என்கிறோம். இலங்கை போன்ற நாட்டிற்கு நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி முறை அவசியமானது. சனாதிபதிக்கு அளிக்கப்பட்டுள்ள சில எல்லை கடந்த அதிகாரங்களே சாதகமற்றவை. சனாதிபதி தான் நீதிமன்றத்துக்கும். பாராளுமன்றத்திற்கும் கட்டுப்படாதவர் என்கின்றார். அதனையே ஒழிக்க விரும்புகிறோம் எனத் தெரிவித்தார்

# இராணுவத்தின் செயற்பாட்டை வன்மையாகக் கண்டிக்கிறோம்

### -யாழ்.பல்கலை மாணவர் ஒன்றியம்

யாழ்குடாநாட்டில் இராணுவத்தின் மிலேச்சத்தனமான செயற்பாடுகளையும் பத்திரிகை உரிமைகள் தடுக்கப்படுவதையும் வன்மையாகக கண்டிக்கின்றோம் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம தெரிவித்துள்ளது. இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நேற்று முன்தினம் காலை 9.00 மணியளவில் கொடிகாமப் பகுதியில் இராணுவ வாகனம் மோதி பரிதாபகரமான முறையில் இளைஞன் ஒருவர் உயிரிழந் ததும் அதனைத் தொடர்ந்து அங்கு திரண்ட மக்கள் மீது அடாவடித்தனங்களைப் படையினர் மேற்கொண்டதும், எமது பல்கலைக்கழக மாணவர்கள், பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்டதும், அவர்களது புகைப்படக் கருவிகள் பறிக்கப்பட்டு நாசமாக்கப்பட்டவை போன்றவை பெரும் விசனத்தை ஏற்படுத்துகின்ற செயல்கள் ஆகும்.

இவ்வாறு அடக்குமுறைகளை எம்மீது திணிப்பதையும் பத்திரிகைச சுதந்திரத்தினைப் பறிப்பதையும் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இவ்வாறான பல சம்பவங்கள் இராணுவத்தினரால் தொடர்ந்தும் எம்மண்ணில் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றது. அதில் ஒரு நிகழ்வாகவே இந்த நிகழ்வும் நடந்தேறியுள்ளது.

இவ்வாறான நிகழ்வுகள் இவ்வாறான நிகழ்வுகள் இனியும் நடைபெறாமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை உடனடியாக இராணுவத்தலைமை முன்னெடுக்க வேண்டும். இலங்கை இராணுவத்தின் கண்மூடித்தனமான நடவடிக்கைகளும் ஊடகவியலாள் உரிமைகளுக்குக் குந்தகம் ஏற்படுத்தும செயற்பாடும் சமாதானச் சூழலுக்கு பங்கம் விளைவிக்கும் செயலாகவே அமையும் என்பதனையும் குறிப்பிட விரும்புகின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (36)

# ஹெல உறுமய ப.உ.புஞ்ஞானந்த தேரரை கட்சியிலிருந்து நீக்க நீதிமன்றம் தடை

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் புஞ்ஞானந்த தேரரைக் கட்சியில் இருந்து நீக்குவதையும், பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து நீக்குமாறும் தேர்தல் ஆணையாளாருக்கும் பாராளுமன்ற செயலாளர் நாயகத்திற்கும் ஜாதிக ஹெல உறுமய கட்சி விடுத்த வேண்டுகோளை இரத்துச செய்யுமாறு உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

புஞ்ஞானந்த தேரர் ஜாதிக ஹெல உறுமய காரணங்கள் எதுவும் இன்றிக் கட்சியில் இருந்து தம்மை நீக்குவதாகவும், பாராளு மன்ற உறுப்பினர் பதவியில் இருந்து தம்மை நீக்குமாறு தேர்தல ஆணையாளருக்கும், பாராளு மன்ற செயலாளர் நாயகத் திற்கும் ஜாதிக ஹெல உறுமய கட்சி அறிவித்தமை சட்டவிரோ தமானது எனக் கூறி தாக்கல் செய்த மனுவை அடுத்தே உயர் நீதிமன்றம் இந்த உத்தரவை வழங்கியதாகக் கூறப்பட்டுள்ளது.

# போதைவஸ்துப் பிரச்சினை; வெலிக்கடைச் சிறையில் மோதல்

வெலிக்கடைச் சிறைச்சாலையில் கடந்த சனிக்கிழமை இரவு கைதிகளுக்கிடையே மோதலொன்று இடம்பெற்றுள்ளது. இதில் 6 பேர் வரையில் காயமடைந்து சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

இம்மோதலுக்கு போதைவஸ்து தொடர்பான பிரச்சினையே காரணம் எனக் கூறப்படுகிறது. இம்மோதலில் ஈடுபட்டவர்களிடமிருந்து கையடக்கத் தொலைபேசிகள் சிறிய ரக ஆயுதங்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளதாக சிறைச்சாலை அதிகாரிகள் கூறுகின்றனர். (32)

# திருமலை மனையாவெளியில் மலைப்பாம்பு அட்டகாசம்

திருக்கோணமலை மனையாவெளிப் பகுதியில் மலைப்பாம்பின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் அருகில் உள்ள கடற்படைத்தள பகுதியில் இருந்து இப்பிரதேசத்தில் பிரவேசித்து, பின்னர் அகன்று சென்றதாக தெரிவித்துள்ள பிரதேச மக்கள் தற்போது பெய்து வரும் அடைமழையினைத் தொடர்ந்து மனையாவெளி குளக்கரைக்கு அண்மித்த இந்த மலைப்பாம்பு ஆடு ஒன்றினை விழுங்கிய நிலையில் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனைப் பார்வையிட பெருமளவிலான மக்கள் மனையாவெளி பகுதிக்கு நேற்று முன்தினம் சென்றதாக எமது செய்தியாளர் தெரிவித்துள்ளார். கடற்படைத் தளத்தின் ஒரு பகுதி அண்மையில் துபபுரவு செய்யப்பட்டு தீயிட்ட போது அங்கிருந்து இந்த மலைப்பாம்பு மனையாவெளிப் பகுதிக்கு வந்து சென்றதாக பிரதேசவாசிகள் தெரிவித்தனர். சுமார் 15 அடி நீளமானதாக இது காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

### கடத்தப்பட்ட வாகனங்கள் மீட்பு

(கொழும்பு)

களனிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சபுகஸ்கந்தப் பகுதியில் கடத்தப்பட்ட வாகனங்களின் தரிப்பிட மறைவிடம் ஒன்றை பொலிசார் முற்றுகையிட்டுள்ளனர். பெருந்தொகையான வாகனங்கள் கடத்தப்பட்டு உருமாற்றம் செய்யப்படும் வாகன இயந்திரம் மற்றும் வாகன அடிச்சட்ட இலக்கங்கள் மாறறப்பட்டும், அழிக்கப்பட்டும் உள்ளதாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர். (32)

# திருமலை இராணுவக் கட்டளை அதிகாரியுடன் தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகள் சந்திப்பு

திருக்கோணமலை இராணுவ கட்டளையிடும் அதிகாரி மேஜர் ஜெனரல் பராமி குலதுங்க நேற்று முற்பகல் 10.00 மணிக்கு திருகோணமலையில் தொழிற்படும் தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்துள்ளார். இச் சந்திப்பில் திருகோணமலை மாவட்டத்தின் தற்போதையநிலை குறிப்பாக புதிதாக அமைக்கப்படும் சோதனைச்சாவடிகள் மற்றும் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் அரச சார்பற்ற நிறுவனங்களின் வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் குறிப்பாக திருகோணமலைப் பாலம்போட்டாறு பகுதியில் உள்ள தம்பலகாமம் பிரதேச பண்ணை வளர்ப்பாளர்களின் மேய்ச்சல் தரை பற்றிய விடயம் முக்கியமாக ஆராயப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பாலம் போட்டாறு என்னும் இடத்தில் 1000 ஏக்கர் மேய்ச்சல் தரையாக தம்பலகாமம் பகுதிமக்களுக்குப் பல வருடங்களுக்கு முன்னர் அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. அரசுக்கும் விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கும் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தானதைத் தொடர்ந்து இப்பிரதேசத்தில் கடற்படையினர் முகாம் ஒன்றினை அமைத்துள்ளனர். இதனைத் தொடர்ந்து இப் பகுதிக்குப் பொது மக்கள் செல்வது இரண்டு வருடங்களாகத் தடை செய்யப்பட்டிருந்தது. இதன் காரணத்தால் மேய்ச்சல் தரையினைப் பயன்படுத்த முடியாது பண்ணையாளர்கள் மிகுந்த சிரமங்களை அனுபவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (32)

## செய்தியாளர் மீதான தாக்குதலுக்கு சுதந்திர ஊடக அமைப்பு கண்டனம்

யாழ்ப்பாணம் கொடிகாமம் பகுதியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற வாகன விபத்துத் தொடர்பாக செய்தி சேகரிக்கச் சென்ற மூன்று பத்திரிகையாளர்கள் இராணுவத்தினரால் தாக்கப்பட்டமைக்கு சுதந்திர ஊடக அமைப்புத் தமது கண்டனத்தைத் தெரிவித்துள்ளது. இராணுவமும் பொலிசாரும் மக்களுக்கு தகவல் சென்றடையும் வழிக்கு தடையாக இருக்கக் கூடாது என அந்த அமைப்பின் அழைப்பாளர் சுனந்த தேசப்பிரிய கேட்டுள்ளார். (32)

## இராணுவ வாகனச்சாரதிக்கு நாளை வரை விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

யாழ். கொடிகாமம் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இராணுவ வாகன விபத்தில் சம்பந்தப்பட்ட இராணுவ நீர்த்தாங்கி வாகனச் சாரதியான முதியான்சே விஜயசிங்க என்ற இராணுவச் சாரதியை நாளை வரை யாழ். சிறைச்சாலையில் விளக்க மறியலில வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்ற நீதவான் பாலசுப்பிரமணியம் உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி இராணுவச் சாரதி நேற்று யாழ்.சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் கொடிகாமம் பொலிசாரால் ஆஜர்ப்படுத்தப்பட்டதையடுத்தே சாவகச்சேரி நீதவான் இவ் உத்தரவைப் பிறப்பித்துள்ளார். (33, 27)

## தமிழீழ வரலாறும் சமூகக்கல்வியும் ஆண்டிறுதித் தேர்வு 2004

தரம் 06,07,08 இற்கான தமிழீழ வரலாறும் சமூகக்கல்வியும் தேர்வு வரும் 19ஆம் திகதி வெள்ளிக் கிழமை பின்வரும் நேர அட்டவணைப்படி நடைபெறவுள்ளது. தேர்வு நிலையங்கள் அந்தந்தப் பள்ளிகள் அல்லது வலயக்கல்விப் பணிப்பாளரின் அறிவுறுத்தலுக்கமைவாக இருக்கும் என தமிழீழ கல்விக்கழகம் அறிவித்துள்ளது.

| ஆண்டு(தரம்) | நேரம் |
|---|---|
| 06 | 09.00மணி-10.30மணி |
| 07 | 09.00மணி-11.00மணி |
| 08 | 09.00மணி-11.00மணி |

## "வர்ணங்கள் கரைந்த வெளி" சிறப்புற நடந்த நூல் வெளியீடு

(அலுவலக செய்தியாளர்)

புலிகளின் குரல் வெளியீட்டில் தா.பாலகணேசனின் "வர்ணங்கள் கரைந்த வெளி" நூல் வெளியீட்டுவிழா நேற்று கிளிநொச்சி பண்பாட்டு







மண்டபத்தில் நடைபெற்றது. புலிகளின் குரல் துணைப்பொறுப்பாளர் செயல்வீரன் தலைமையில் நேற்றுமாலை 5.30மணிக்கு ஆரம்பமான மேற்படி நிகழ்வில் பொதுச் சுடரினை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம் அவர்கள் ஏற்றிவைக்க ஈகச்சுடரினை திருமதி லீலாவதி தாமோதரம்பிள்ளை ஏற்றிவைத்தார்.

தலைமையுரையினைத் தொடர்ந்து நூல் வெளியீட்டுரையினை கவிஞர் வில்வரத்தினம் வழங்கினார். தொடர்ந்து "வர்ணங்கள் கரைந்த வெளி"நூலை தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் அவர்கள் வெளியிட்டுவைக்க திருமதி திருநாவுக்கரசு நூலினைப் பெற்றுக் கொண்டார். சிறப்புப்பிரதிகள் வழங்கலினைத் தொடர்ந்து நூல் மதிப்பீட்டுரையினை எழுத்தாளர் நிலாந்தன் வழங்கினார். சிறப்புரையினை தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் அவர்களும் பதிலுரையினை கவிஞர் பொன்னம்பலமும் நிகழ்த்தினார். போராளி எல்லாளனின் நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவுற்றது. (சோ)

## வெள்ளம்...

நீரில் விளையாடவெனச் சென்ற குழந்தை குழியினுள் விழுந்து மரணம் நிகழ்ந்துள்ளது எனத் தெரியவருகின்றது.

இதேவேளை, யாழ் நகர புறநகர்ப் பகுதியான பொம்மை வெளிப்பகுதியில்,மழை வெள்ளம் தேங்கிநின்ற குழியினுள் வீழ்ந்த பச்சிளங் குழந்தையொன்று உயிரிழந்துள்ளது.

நேற்று மதியம் இடம்பெற்ற இப்பரிதாப சம்பவத்தினில் மீட்கப்பட்ட குழந்தையின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேதஅறையில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

உயிரிழந்த குழந்தை மா.மேரி கென்சியா (2வயது) எனும் பெண் குழந்தையெனத் தெரியவருகின்றது.

அண்மைக்காலமாகப் பெய்து வரும் அடைமழையினால் குறித்த பகுதிகள் பலவும் வெள்ளத்தினுள் மூழ்கிப்போயுள்ளன. எனினும் அப் பகுதி மக்கள் இடம்பெயர்ந்து வசிக்க மாற்றிடங்கள் ஏதுமின்றி தமது குடியிருப்புக்களிலேயே தொடர்ந்தும் தங்கியுள்ளனர்.

இந்நிலையில் வெள்ளத்தினால் சூழப்பட்ட வீட்டினில் வசித்து வந்த குடும்பமொன்றின் ஒரேயொரு பெண்குழந்தையே வெள்ளத்தில் மூழ்கி நேற்று உயிரிழந்துள்ளது.

வீட்டிற்கு வெளியே வந்த குழந்தை அங்கு வெட்டப்பட்ட குழியொன்றினுள் தவறிவீழ்ந்துள்ளது. வெள்ளத்தினால் மூடப்பட்டிருந்த இக்குழிக்கு வெளியே குழந்தையினது விளையாட்டுப் பொருட்கள் மிதந்ததையடுத்து குறித்த குழந்தை வெள்ளத்தினுள் மூழ்கி உயிரிழந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (27,தீ)

## துண்டுவிழும் தொகையைச் சமாளிக்க ரூபா நோட்டு அச்சிட அரசு முயற்சி

-ஐ.தே.கட்சி குற்றச்சாட்டு

அரசாங்கம் வரவு செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் தொகையான 159 பில்லியன் ரூபாவை மத்திய வங்கியின் மூலம் அச்சிட நடவடிக்கை எடுத்துள்ளதாக ஐக்கிய தேசிய கட்சி குற்றம் சுமத்தியுள்ளது. அரசாங்கத்துக்கு தமது பொய்யான தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றும் முகமாக இந்தச் சட்டரீதியற்ற நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டியேற்பட்டுள்ளதாக முன்னாள் பிரதி நிதி அமைச்சர் பந்துல குணவர்த்தன நேற்று எதிர்கட்சித் தலைவர் காரியாலத்தில் நடைபெற்ற ஊடக மாநாட்டின்போது தெரிவித்தார், அரசாங்கம், அரச ஊழியர்களுக்கு சிறிய சம்பள உயர்வை வழங்கி அதில் பாரிய தொகையை மீண்டும் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (32)

## அரச...

களின் போக்குவரத்திற்கு தீர்வு காணப்படவுள்ளதாகத் தெரிய வருகிறது. (28,27,33)

## வன்னிப்...

அக்கராயன் மாகாவித்தியாலயத்திலும், பிற்பகல் 3.30மணிக்கு கிளி மத்திய கால்லூரியில் வைத்தும் கடன்மீளளிப்பிற்கு தெரிவானவர்களுக்கும் மற்றும் 2004ஆம்ஆண்டுவரை மீளளிப்பிற்குதெரிவு செய்யப்பட்டோரில் இது வரை மீளப் பெறாதோருக்கும் மேற்படிமீளளிப்பு நடவடிக்கைகளை தமிழீழ நிதித்துறை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## எந்தவித..

செயற்றிறன் மிக்கதுமான பங்களிப்பு இல்லாமையே நாட்டை முன்கொண்டு செல்ல முடியாமல் உள்ளதென்ற உண்மையைக் கூறியதற்காக தான் தூற்றப்படுவதாகவும் அவர் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் நீங்கள் கூறுகிறீகள் அரசியல் தொழிலாக மாறிவிட்டது என்று, ஆனால் நான் கூறுகின்றேன் அது வியாபாரமாக மாறிவிட்டதென்று.

நான் இதை மீண்டும், மீண்டும் கூறிவருகிறேன் உண்மையைக் கூறுவதற்காக நான் தூற்றப்படுகின்றேன். நான் மக்களைச் சாடுவதாகவும், ஏசுவதாகவும் கூறப்படுகின்றன.

சனாதிபதி தனது பத்தாவது வருட பூர்த்தியில் பொலிசாரையும் நிதித்துறையினரையும் சாடினார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் சட்டம், ஒழுங்கு ஆகியவற்றின் கௌரவம் மிகு தன்மையைப் பாதுகாப்பதற்கு இரண்டு நிறுவனங்கள் பொறுப்பாக உள்ளன. பொலிஸ் மற்றும் நீதித்துறை ஆகியவற்றின் நேர்மையானதும், செயற்றிறன் மிக்கதுமான பங்களிப்பு இல்லாவிடின் நாட்டை முன்கொண்டு செல்ல முடியாதென நான் நேர்மையாகக் கூறியிருந்தேன்.

இந்த நிலைமையை மாற்றியமைக்கத் தேவையான செயற்பாடுகளை முன்னெடுக்குமாறு பொலிசாரிடமும், நீதித்துறையினரிடமும் நான் கூறினேன். அங்கு அதிகளவு ஊழல் நிலவுவதாகவும் தெரிவித்தேன. நான் அதைக் கூறவில்லை. ரான்ஸ்பரன்ஸி இன்ரநஷனலே இதனைக் கூறியது.

பிராந்தியத்தில் மிக மோசமான ஊழல்மிக்க பொலிஸ் மற்றும் நீதித்துறை இலங்கையில் உள்ளதெனத் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டின் முடிவிலோ, இவ்வாண்டின் தொடக்கத்திலோ அவர்கள் அதனைக்கூறி இருந்தனர். தற்போதைய அரசாங்கம் அதிகாரத்திற்கு வருவதற்கு முன்னர் அதனைக் கூறி இருந்தனர்.

இதுகுறித்த நிறுவனத்தினுடையதோ அல்லது தனிப்பட்டதவறோ அல்ல. மாறாக நாட்டை நிர்வகிப்பவர்களின் தவறே ஆகும்.

நீதிமன்றம் மோசடிமிக்கது. முழுச்சட்டத்துறையும் மோசடி மிகுந்ததெனப் பிரதம நீதியரசரும் இங்கிருக்கும் சட்டமா அதிபரும் கூறியுள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் பேச்சுவார்த்தை நடத்தினர். இதனை மறைப்பதில் எவ்வித பயனுமில்லை.

இன்று உலகின் மோசடிகள் தொடர்பாக ஆராய்ந்து பார்க்கும் முக்கிய அரச சார்பற்ற நிறுவனம் ரான்ஸ்பரன்ஸி இன்ரநஷனல் நிறுவனமாகும்.

ரான்ஸ்பரன்ஸி இன்ரநஷனல் நிறுவனம் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் சனவரி பெப்ரவரி மாதங்களில் வெளியிட்ட அறிக்கையில் முழுவலயத்திலும் அதிகளவு மோசடி மிக்க பொலிசும் நீதிமன்றங்களும் இலங்கையிலேயே உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது வெட்கமாக உள்ளது என்றார் அவர்.

## உயிர்காக்கும்...

செ.முரளி, முல்லை மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் சி.குணசிங்கம் ஆகியோருடன் முல்லை மாவட்ட கூட்டுறவு அமைப்புக்களின் தலைவர்கள் பொது முகாமையாளர்கள், செயலாளர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர். இத்திட்டம் தொடர்பில் முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளரும், முல்லை மாவட்ட நிர்வாக சபைப் பொறுப்பாளரும் உட்படப் பலர் கருத்துக்களை முன்வைத்தனர். அனைத்துக் கருத்துக்களும் ஏற்றுக் கொள்ளப்பட்டு தமிழீழத் தேசியத் தலைவரின் 50 ஆவது பிறந்த தினத்தையொட்டி உயிர் காக்கும் உயர்ந்த பணியான இரத்ததானம் செய்யும் அமைப்பொன்று உருவாக்கப்பட வேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டது.

இரத்ததான அமைப்பின் தலைவராக பத்மநாதன் அவர்களும், செயலாளராக இஸ்ராலின் அவர்களும், பொருளாளராக வே.அருணோதயம் அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். இதனுடன் 5 நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். இரத்த தானம் செய்யும் இவ் அமைப்பின் அங்கத்தவர்கள் 20 பேர் உடனடியாக இணைந்து கொண்டு தமது பெயர்களைப் பதிவு செய்து கொண்டனர். உயிர் காக்கும் முல்லை மாவட்ட இரத்ததான அமைப்பின் ஆரம்ப வைபவம் எதிர் வரும் 22 ஆம் திகதி திங்கட் கிழமை மாலை 3.00 மணிக்கு முல்லை மாவட்ட அரசியல்துறைப் பணிமனையில் இடம்பெறும் எனவும் முடிவு எடுக்கப்பட்டது. உயிர் காக்கும் உன்னத பணியான இரத்ததான அமைப்பில் இணைந்து இரத்ததானம் செய்ய விரும்புவோர்கள் அமைப்போடு தொடர்பு கொண்டு அங்கத்தவர்களாக இணைந்து கொள்ள வாய்ப்பு வழங்க வேண்டும் என்று முடிவு எடுக்கப் பட்டது. (20)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.